# அம்மா அப்பா

## பாகம் 3

# அம்மா அப்பா

## பாகம் 3

✤ ✤ ✤

**ஒரு சொல்லில் கவிதை**

**என்றால் அது அம்மா...**

**ஒரு சொல்லில் சரித்திரம்**

**என்றால் அது அப்பா...**

யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும்
நகல் எடுத்துக் கொள்ளலாம்,
வியாபார நோக்கு இல்லாதவரையில்.
நல்ல விஷயங்கள் பரவட்டுமே !

புத்தகம் அச்சிடுபவர் :
**ராஜ்குமார் பிரிண்டர்ஸ்**
புத்தூர், திருச்சிராப்பள்ளி-620 017.
செல் : 98651 13112

# அம்மா அப்பா - பாகம் 3

**திருச்சிராப்பள்ளி – 1**
1.1.2019

## முன்னுரை

*அம்மா அப்பா பாகம் 1 மற்றும் பாகம் 2 க்கு அன்பர்கள் அளித்து வரும் அளப்பரிய ஆதரவைத் தொடர்ந்து அம்மா, அப்பா பாகம் 3ல் அம்மா அப்பாவைப் பற்றி மேலும் பல கட்டுரைகள், கவிதைகள், கதைகளைத் தொகுத்து வழங்கியுள்ளோம்.*

*இக்கதைகள் எல்லாம் நம்மால் எழுதப்பட்டவை அன்று. ஆசிரியர்கள் பலரால் எழுதப்பட்டு பல்வேறு இதழ்களில் வெளியானவைகள்தான் இவை. அவர்களது அனுமதி இல்லாமல் படைப்புகளை வெளியிடுவதில் ஆட்சேபம் இருக்காது என நம்புகிறோம். கட்டுரைகள் மிக நெகிழ்வாக உள்ளன, நன்றாக உள்ளன, உபயோகமாக உள்ளன என்று யாராவது நினைத்தால் அப்பெருமைகள் அனைத்தும் அந்தந்த ஆசிரியர்களையும், பத்திரிக்கைகளையும் சேரும். சில படைப்புகளின் ஆசிரியர் பெயர் தெரியாததால் அதைக் குறிப்பிட இயலாதது சற்று வருத்தமே!*

*வளரும் தலைமுறையினர் இவைகளைப் படித்து பயன்பெற வேண்டும் என்ற தூய நோக்கத்தின் அடிப்படையில் அடக்கவிலைக்கே வெளியிடப்படுகின்றது. இத்தொகுப்பை யார் வேண்டுமானாலும் நகல் எடுத்துக் கொள்ளலாம். நல்ல கருத்துக்கள் எல்லோருக்கும் போய்ச் சேர்ந்தால் அதைவிட வேறு மகிழ்ச்சி என்ன இருக்க முடியும் !*

***அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்***
***அவர்தம் ஆசி இருந்தால் வாழ்வில் உயர்வோம்.***

**தொகுப்பு :**

**B. கனக சபாபதி**
**94430 43426**
bkvaluer@gmail.com

**S. பாலகுமாரன்**
**89034 63858**

# பொருளடக்கம்


| எண். | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 1 | அம்மா வருவாளா ? | 1 |
| 2 | ஒரு மகனுக்கு தாயின் கடிதம் | 5 |
| 3 | அம்மா...! | 7 |
| 4 | ஒரு தாயின் வேதனையான கேள்வி | 8 |
| 5 | அம்மா... நீ சும்மாதானே இருக்கே.. | 10 |
| 6 | நன்றிம்மா | 12 |
| 7 | அன்புள்ள மகனே ! | 14 |
| 8 | போனால் போகிறது விடு... | 17 |
| 9 | Poor Mother...Proud Children | 19 |
| 10 | Appa - I Love You... | 21 |
| 11 | அப்பா நமக்காக எது செய்தாலும், சொன்னாலும் ஒரு சிறந்த எதிர்காலம் இருக்கும் | 22 |
| 12 | சுதந்திரமாக இருக்க விரும்பிய மகள் ! | 24 |
| 13 | தந்தையும்...மகளும்... | 25 |
| 14 | எத்தனை வலிகள் | 26 |
| 15 | மறுபடி உன் மகளாகப் பிறக்க வரம் மட்டும் போதுமப்பா | 28 |
| 16 | மகளைப் பெற்ற அப்பாக்களுக்கு சமர்ப்பணம் | 29 |
| 17 | பெண் குழந்தைகளுக்கு ஏன் அப்பாக்களைப் பிடிக்கிறது? | 31 |
| 18 | இது அப்பாவை நேசிப்பவர்களுக்கானது! | 33 |
| 19 | அழுக்கு வேட்டியும்...அப்பாவும்! | 34 |
| 20 | வயதுக்கு வந்த மகளை வளர்க்க வேண்டியது அம்மாவா? அப்பாவா? | 38 |
| 21 | ஒரு மழலையின் அன்பு | 42 |
| 22 | மை டியர் சின் | 44 |
| 23 | அப்துல் கலாமின் இளமைக்கால வாழ்க்கை | 46 |


* * *

# 1. அம்மா வருவாளா?

“ஏன்னா”

“என்ன?”

“இந்த சனிக்கிழமை...ஹோட்டல் சாப்பாடா?”

“ஆமாம்”

“அதுக்கப்புறம் சினிமாவா?”

“ஆமாம். அதெப்படி அவ்வளவு கரெக்டா சொல்றேள்?”

“இது என்ன பிரமாதம்? இதுதான் நீ வாரா வாரம் கேக்கற ஒண்ணாச்சே ”

“அது சரி ஆனா இந்த வாரம் நீங்க ஒங்க கூட அழெச்சின்டு போகப் போறது என்னெ இல்லெ. வேறே ஒரு பொண்ணெ. அந்தப் பொண்ணெ நீங்க விரும்பறேளோ இல்லியோ அவா உங்க மேலெ ரொம்ப ஆசை வெச்சிருக்கா”

“என்ன சொல்றெ நீ ? என் வாழ்க்கைலெ இன்னோரு பொண்ணா? நிச்சயமாகக் கெடெயாது”

“இருக்கா”

“யாரெச் சொல்றெ நீ?”

“ரெண்டு வருஷத்துக்கு முந்தி முதியோர் இல்லத்துலெ கொண்டு போய் உட்டுட்டு வந்தேளே ஒங்க அம்மாவெ அவளெத்தான் சொல்றேன் நான். பாவம் அம்மா, பாசத்துக்கு ஏங்கிண்டு இருப்பா. அது மாத்ரம் இல்லெ இன்னிக்கி மே எட்டு, அம்மா சொல்லிண்டு இருப்பா இன்னிக்கித்தான் இந்தப் பாழாய் போற ஜென்மம் எடுத்தேன் நான்னு. அம்மாவெ ஒரு கோவிலுக்கு அழெச்சிண்டு போயிட்டு. ஒரு நல்ல ஹோட்டல்லெ ஒரு ட்ரீட் குடுங்கோ, முடிஞ்சா ஒரு சினிமாவுக்கும் கூட்டிண்டு போயிட்டு வாங்கோ”.

என் மனத் திரையில் சினிமா போல ஓடியது இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவங்கள்.

டிகிரி பட்டம் வாங்கிய வருடமே அமெரிக்காவில் ஒரு பன்னாட்டுக் கம்பெனியில் சேர்ந்த எனக்கு இரண்டே வருடங்களுக்குள் சென்னைக்கே பிராஞ்சு மேனேஜராக மாற்றல் ஆகி இருந்தது. பெரிய பங்களா, இரண்டு கார், வாட்ச்மேன், தோட்டக்காரன், சமையல்காரன், இத்தியாதி சௌகரியங்களுடன் அதே வருடம் கல்யாணமும் நடந்தது.

இவ்வளவு இருந்த எனக்கு மனதில் மட்டும் நிம்மதி இல்லை. தினமும் மாலையில் வீடு திரும்பியதும் மனைவியிடம் இருந்து கேட்கும் வார்த்தைகள், “இன்னிக்கு ஒங்க அம்மா என்ன சொன்னா தெரியுமா?” என்று ஆரம்பித்து சாங்கோ பாங்கமாக அம்மா அவளுக்கு அன்று சொல்லிக் கொடுத்தவை அத்தனையும். புடவை எப்படிக் கட்டிக் கொள்வது என்பதில் இருந்து, கோலம் எப்படிப் போட வேண்டும், தலையை எப்படி வாரிப் பின்னிக் கொள்ள வேண்டும் போன்ற சின்னச் சின்ன விஷயங்கள்.

விஷயங்கள் என்னவோ சின்னவைதான். அவற்றைச் சொல்லும் விதத்தில் வெளிப்படையாகத் தெரியும் அவள் ஏன் அவற்றைச் சொல்கிறாள் என்பது.

இரு தலைக் கொள்ளி எறும்பானேன் நான்.

ஒரு நாள் அலுவலகத்தில் ஒருபெரிய பிரச்சினை. ஆடிப் போயிருந்தேன் நான்.

வீடு திரும்பிய என்னிடம் ஆரம்பித்தாள் என் மனைவி, "இன்னிக்கி அம்மா என்ன சொன்னா தெரியுமா?" என்று.

"ஒண்ணும் சொல்ல வேணாம் நீ, இதுக்கு ஒரு நிரந்தர முடிவு கட்றேன் இன்னிக்கி" என்றபடி நேராக அம்மாவின் அறைக்குப் போனேன்.

"அம்மா, ஒன்னாலெ வாயெ வெச்சிண்டு சும்மாவே இருக்க முடியாதா?"

"நான் என்னடா சொன்னேன் அப்படி? சாயங்காலம் நீ ஆபிசுலேந்து வரெச்சே தலையெ விரிச்சுப் போட்டுண்டு நிக்காதே. எண்ணெ தடவி அழகாத் தலைய வாரிண்டு பூ வெச்சிண்டு இருன்னு தானேடா சொன்னேன். இது சொல்லக் கூட உரிமை இல்லையாடா எனக்கு?"

"ஆமாம் இல்லெ."

"ஆமாம் இல்லென்னா என்னடா அர்த்தம்?"

"புரியலெ? ஆமாம் உனக்கு உரிமெ இல்லென்னு அர்த்தம் அம்மா. இதுக்கு நான் ஒரு முடிவு கட்றதா இருக்கேன் ஒன்னெ நாளெக்கே ஒரு நல்ல முதியோர் இல்லத்துலெ கொண்டு போய் உடறதா இருக்கேன். அங்கே பல பிரபலங்கள்லாம் இருக்கா".

"சரிடாப்பா. ஒனக்கு எது நல்லதுன்னு தோணறதோ அப்படியே செஞ்சூடு".

அன்றிரவு அம்மா சாப்பிடக் கூட வரவில்லை. எனக்கு வயிறு சரியில்லை. ஒரே நெஞ்செரிச்சலாக இருக்கிறது என்று படுத்துக் கொண்டு விட்டாள்.

மறுநாள் காலை எனது காரியதரிசிக்குப் போன் பண்ணிச் சொன்னேன் அன்று பிற்பகல்தான் நான் ஆபீஸுக்கு வருவேன் என்று. அம்மாவின் அறைக்குள் சென்றபோது அவள் ஒரு பெட்டியுடன் தயாராக இருந்தாள். அவள் ஆஸ்தியெல்லாம் நான்கு புடவைகள், அதற்கேற்ற ரவிக்கைகள், இரண்டு ஸ்லோக புஸ்தகங்கள். பென்ஷன் புத்தகம், ஒரு பேங்க் பாஸ் புக், ஒரு செக் புக் இவைதான்.

அவளைக் கொண்டு போய் முதியோர் இல்லத்தில் விட்டு விட்டு வந்தேன். போகும் போது ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை அம்மா. நானுந்தான்.

முதியோர் இல்லத்தில் கட்டவேண்டிய முன் பணத்தைக் கட்டிவிட்டு அவர்கள் காட்டிய அறையில் கொண்டு போய் அம்மாவை விட்டு விட்டு நான் கிளம்பிய போது, அம்மா அழவில்லை. ஏன் நானும்தான். அம்மா தன் கையைத் தூக்கி இப்படியும் அப்படியுமாக மெல்ல வலுவின்றி அசைத்து என்னை வழி அனுப்பினாள். நானும் கை அசைத்தேன்.

அம்மாவை விட்டு வந்த மறு மாதம் அந்த முதியோர் இல்லத்திற்கு அனுப்பிய செக் திரும்பி வந்தது அவர்களிடம் இருந்து. அதன் கூட இருந்த கடிதத்தில், அம்மாவே பணம் கட்டி விட்டதால் இந்த செக்கைத் திருப்பி அனுப்புகிறோம். கூடவே நீங்கள் கட்டிய முன் பணத்திற்கான செக்கும் வைத்திருக்கிறோம் என்றிருந்தது.

இன்றோடு இரண்டு வருடங்கள் ஓடி விட்டன. அம்மாவை எந்த முகத்தை வைத்துக் கொண்டு பார்க்கப் போகிறேன். இதற்காக இரவல் முகமா வாங்க முடியும்? மனதைத் திடம் செய்து கொண்டு முதியோர் இல்லத்தை அடைந்தேன். அம்மாவின் அறைக்குள் நுழைந்த போது அவள் முகத்தில் ஆச்சரியத்தைக் காண நினைத்த எனக்கு சிறு ஏமாற்றம். அம்மாவின் முகத்தில் ஒருவித சலனமும் இல்லை.

“ஏம்மா என்னெப் பாக்கறதுக்கு ஒனக்கு ஆச்சரியமா இல்லெ?”

“எதுக்குடா நான் ஆச்சரியப் படணும்? நீ வருவேன்னு தெரியுமே.”

“எப்பிடி அம்மா தெரியும்?”

“கமலா முந்தா நேத்தே போன் பண்ணிச் சொன்னாளே. தாஸப்ரெகாஷ் ஹோட்ட லுக்கும் இங்கெ இருக்கெற ஆபீஸ் பையன் மூலமாகப் பணம் கட்டிட்டேன். என்ன ஒண்ணு, நான் மூணு பேருக்குக் கட்டினேன் பணம். கமலாவும் வருவான்னு நெனெச்சேன்.”

“அம்மா ஒனக்குப் பொறந்த நாள் வாழ்த்துக்கள்!”

“டேங்ஸ்டாப்பா”

“அது டேங்க்ஸ் இல்லேம்மா, தேங்க்ஸ்மா”

“ஏதோ ஒண்ணு நானே ஏண்டா பொறந்தோம்னு நெனெச்சிண்டு இருக்கேன். நீ வேறே நெனெவு படுத்தறயாக்கும் நான் ஜென்மம் எடுத்ததெ.....”.

“அம்மா வா நாமொ மொதல்லெ பக்கத்துலெ இருக்கற பரமேஸ்வரி அம்மன் கோயிலுக்குப் போறோம். அப்புறமா தாஸப்ரெகாஷ் அதுக்கப்புறம் டைம் இருந்தா ஒரு சினிமாக்கும் போறோம்.”

அம்மா மெல்லக் கட்டிலை விட்டு இறங்கினாள். கைத் தாங்கலாகப் பிடித்து வெளியே அழைத்து வந்து கதவைப் பூட்டி சாவியை அம்மாவின் கையில் கொடுத்தேன்.

இரண்டு வருடங்களுக்கு முன் ஓடி ஓடி வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து வந்த அம்மாவா இப்படி நாலடி எடுத்து வைக்கவே சிரமப் படுகிறாள்?

“இப்படித்தான் நீ சின்னக் கொழந்தையா இருக்கச்சே கஷ்டப் பட்டு ஏந்து நின்னு ரெண்டடி வெக்கெறதுக்குளே பொத்துனு விழுவெ நான் ஓடி வந்து ஒன்னெத் தாங்கிப் புடிச்சுக்குவேன். அப்போ ஒன் கால்லெ தெம்பு இல்லெ. என் கால்லெ இருந்தது. இப்பொ ஒன் கால்லெ தெம்பு இருக்கு. என் கால்லெ இல்லெ”.

மெல்ல நடந்து காரை அடைந்து அம்மாவை காரில் ஏற்றினேன். கோவிலில் நாலைந்து படிகள் கூட மிகவும் சிரமப் பட்டுதான் ஏறினாள். அர்ச்சனை செய்ய வேண்டும் என்றாள் அம்மா.

“பேரு, நக்ஷத்ரம், கோத்ரம் சொல்லுங்கோ” எனறார் குருக்கள்.

“ஸ்வாமி பேருக்கே பண்ணிடுங்கோ” என்றாள் அம்மா.

குருக்கள் அர்ச்சனையை ஆரம்பிக்க அம்மா வேண்டிக் கொண்டாள். “தாயே பரமேஸ்வரி கொழெந்தேள் ரெண்டு பேரையும் நோய் நொடி இல்லாமே நன்னா வெச்சிரும்மா” என்று.

அர்ச்சனை முடித்து உடைத்த தேங்காய், பழம், பூ, வெற்றிலைப் பாக்குடன் கூடிய தட்டை அம்மாவிடம் கொடுக்க வந்த குருக்களை, “பையன் கைலே கொடுத்துடுங்கோ” என்று சொல்லி புடவைத் தலைப்பில் இருந்து ஒரு பத்து ரூபாய் நோட்ட எடுத்து ஆரத்தி தட்டில் வைத்தாள்.

கோவிலில் இருந்து மெல்ல வெளியே வந்து காரில் ஏறி ஹோட்டலை அடைந்தோம். அங்கு மெனு கார்டை தன் கையில் எடுத்துக் கொண்டு பூரி, ரஸ்தார் சப்ஜி, காலி ஃப்ளவர் ஃப்ரை என்று எனக்குப் பிடித்தவைகளாக ஆர்டர் கொடுத்தாள் ஹோட்டல் சிப்பந்தியிடம்.

அம்மா பேச ஆரம்பித்தாள். நான் குழந்தையாக இருந்தபோது அம்மா சாதம் ஊட்ட வந்தால் நானேதான் எடுத்து சாப்பிடுவேன் என்று பிடிவாதம் பிடித்து உடல் பூராவும் சாதத்தைப் பூசிக் கொண்டு தரையில் எல்லாம் வாரி இறைப்பேனாம்.

எப்படி முதல் முதலாக பள்ளிக்கூடம் போக அடம் பிடித்தேன். எப்படி கிட்டத் தட்ட ஆறு மாதங்களுக்கு அம்மா என்னை ஸ்கூலில் கொண்டு போய் விட்டுட்டு வீடு திரும்பவதற்குள் குறுக்கு வழியாக ஓடி வந்து பூட்டியுள்ள வீட்டின் கதவு முன்னே நின்று கொண்டிருப்பேன். எண்ணை தேய்த்துக் கொள்ள என்ன பாடு படுத்துவேன். தலையை வெட்டிக் கொள்ள பார்பரிடம் போகாமல் நானாக வெட்டிக் கொள்வேன் என்று கண்ட படி கத்தரிக் கோலால் நானே தாறுமாறாக வெட்டிக் கொண்டேன் போன்ற அந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றி எல்லாம் பேசினாள் அம்மா. நான் எதுவுமே பேசாமல் மௌனமாக இருந்தேன். ஆனால் உள்ளுக்குள்ளெ அழுது கொண்டிருந்தேன் ஒரு குழந்தை போல.

பழங்கதைகள் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. சினிமாவுக்குப் போகவில்லை. நேராக முதியோர் இல்லத்தினை அடைந்தோம். அம்மாவை அவள் அறையில் விட்டு விட்டு வீடு திரும்பினேன். மனைவியிடம் ஒன்றுமே பேசவில்லை. அவள் பேச ஆரம்பித்தபோது, “எனக்கு தலை வலிக்கிறது. என்னைக் கொஞ்ச நேரம் நிம்மதியாகத் தூங்க விடு” என்றேன்.

நான்கு நாட்கள் எந்திரம் போல என் வேலைகளைச் செய்து வந்தேன். ஐந்தாவது நாள் காலை முதியோர் இல்லத்தில் இருந்து ஒரு போன் கால் வந்தது. உங்கள் அம்மா நேற்றிரவு தூக்கத்தில் இறந்து விட்டார். அவர் “என் உடலை இந்து முறைப்படி எரித்துவிடவும், அதற்கான பணம் இத்துடன் வைத்திருக்கிறேன்” என்று எழுதி இருந்த ஒரு கடிதமும் உங்கள் பெயருக்கு ஒரு கவரும் மேஜை மேல் இருந்தன. நீங்கள் வந்து உங்கள் தாயின் முகத்தைப் பார்த்து விட்டு அவரது உடலையும், உடமைகளைப் பெற்றுச் செல்லவும் என்று.

அலறி அடித்துக் கொண்டு ஓடினேன். அம்மா முகத்தில் ஒரு சலனமும் இல்லை.

துக்கம் பீறிடக் கத்தினேன். “அம்மா, நீ எங்களுக்கே குழந்தையாகப் பிறக்க வேண்டும். நீ எனக்காக உன் உடல் வருத்தம் பாராது செய்தவற்றையெல்லாம நான் உனக்குத் திருப்பிச் செய்ய வேண்டும். நீ உயிரோடு இருந்தபோது உனக்கு நான் செய்ய வேண்டியவற்றைச் செய்யவில்லை. என்னை நீ மன்னிப்பாயா? எனக்கே குழந்தையாகப் பிறப்பாயா?” என்று.

அம்மா வருவாளா?

* * *

‘அம்மா’
நமக்கு என்னவெல்லாம் செய்தாள்
என்பதை நாம் உணர்வதில்லை...
அப்படி நாம் உணரும்போது
அவள் இருப்பதில்லை !

* * *

# 2. ஒரு மகனுக்கு தாயின் கடிதம்

அன்பு மகனே..!

என் மறைவுக்குப் பின்னர் இந்த கடிதம் உன் கையில் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். பொறுமையாக படி. அவசரமாக வேலை இருக்கு என்று பாதி படித்து மீதிய இன்னொரு நாள் காத்திருந்து படிக்காதே.

உங்கப்பாவை கல்யாணம் செய்யும்போது நான் காலேஜ் லெக்சரர். அப்புறம் நீ பிறந்த பிறகு உங்கப்பாவுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. கன்ஸ்ட்ரக்ஷன் தொழிலில் மிக நல்ல வளர்ச்சி. உன் தங்கச்சி பிறந்த பின் வேலையை விட்டுட்டு உங்களை கவனிச்சிட்டு இருந்தேன். உனக்குத்தான் தெரியுமே.. அப்பா எப்படி பிசின்னு.

கல்யாணம் ஆன ஒரு வருஷம்தான் என் கனவு வாழ்க்கை. அப்புறம் எல்லாமே காத்திருந்த வாழ்க்கைதான். உங்கப்பாவுக்காக காத்திட்டு இருந்தேன். நீங்கள் இரண்டு பேரும்தான் எனக்கு துணை. நீங்க ஸ்கூலுக்கு போய்விட்ட பிறகு, மாலை நீங்க வருவதற்காக காத்திட்டு இருப்பேன்.

ஸ்கூல் விட்டு வந்ததும் கதை கதையா சொல்வீங்க. அதுல பாதி பொய் இருக்கும். அதெல்லாம் உங்க கற்பனைன்னு நினைச்சு ரசிப்பேன். அப்புறம் நீங்க வளர்ந்தீங்க. அம்மாகிட்ட சொல்ல எதுவுமில்லாமல் போச்சு. ஆனா, உங்களிடம் இருந்து ஆர்டர் மட்டும் வரும். இப்ப வெளியே போகனும். இப்படி வெளியே போகனும்னு.. ஆனா வர்ற டைம் பற்றி கேட்க முடியுமா அம்மாவால்.

காத்திட்டு இருப்பேன்.. உங்களுக்காக... உங்கப்பாவுக்காக...

இடையில் உங்கப்பா உடம்பு முடியாம படுத்துட்டாரு. அவருக்கு டயத்துக்கு மாத்திரை கொடுக்கனும். மருந்து கொடுக்கனும், பிசியோதெரபி பண்ணனும்.. காத்திட்டு இருப்பேன். அதுவே என்னோட வாழ்க்கையா ஆயிடுச்சு பாத்தியா..?

அப்புறம் உன் தங்கச்சி கல்யாணம். இப்ப அவ எப்படி இருக்கான்னு அவளா முடிவு செய்கின்ற நேரத்தில்தான் நான் அவள் கூட பேச முடியும்.. ஏன்னா அங்க அவ காத்திட்டு இருக்கா... ஒரு அம்மாவா...

உனக்கு சொல்லவே வேண்டாம். அப்பா தொழிலை நீ செய்ய ஆரம்பிச்சு, உடனே நீ ரொம்ப பிசியாகிட்ட..நீ கடைசி ஐந்து வருஷத்தில் அம்மாகிட்ட பேசினதை கொஞ்சம் யோசியேன்.

சாப்டீங்களா? மாத்திரை போட்டாச்சா? ஊசி போட்டாச்சா? இவ்வளவுதான்.

உங்கப்பா வாழுகின்ற காலத்தில் பிசியா இருந்தாரு. நான் காத்து கொண்டு இருந்தேன். கடைசி காலத்தில் எதுவுமே இல்லாமல் இருந்தாரு. ஆனால், மாத்திரைக்கு காத்துக் கொண்டு இருந்தார். என்னிடம் பேச அவருக்கு விஷயமே இல்லை. பேப்பர் படிச்சாரு, புக் படிச்சாரு, தூங்கினாரு. ஏனென்றால் பேச வேண்டிய காலத்தில் அவர் பேசவில்லை. பேச நேரமிருந்த காலத்தில் பேச விஷயமில்லை.

இப்படித்தான் பெரும்பாலான அம்மாக்களோட வாழ்க்கை முடிந்து விடுகிறது. நாம் என்றைக்காவது வெளியே போகும் போது அங்கே நிறைய அம்மாக்களைப் பார்க்கும் போது அவர்கள் கண்களில் காத்திருந்த ஏக்கம்தான் தெரிகிறது.

இதையெல்லாம் ஏன் இப்ப சொல்கிறேன்னு யோசிக்கிறியா? என் காலத்தில் இதெல்லாம் உங்கப்பாகிட்டே சொல்லி புரிய வைக்க முடியவில்லை. ஆனால், நீ அடுத்த ஜெனரேஷன். கொஞ்சம் யோசிப்பாய் அல்லவா? நான் உயிரோடு இருக்கும்போது சொல்ல முடியவில்லை. சொன்னாலும் உன்னால் அதை கேட்க முடியாது. அதனாலதான் இப்பொழுது சொல்கிறேன். உனக்கு வீட்ல மனைவி இருக்கா.. ஒரு பொண்ணு இருக்கா. காத்திட்டு இருக்காங்க.

உன் தங்கச்சிக்கு உங்கப்பா மேல் இருந்த பாசம் உனக்கு தெரியாது. ஆனால், அதை அவள் வெளிகாட்டும்போது உங்கப்பா கட்டில்ல நகர முடியாமல் இருந்தார். அவர்தான் அப்பான்னு அவள் ஸ்கூல் காலேஜ்கே தெரியாத அளவு அவர் பிசி. அப்பா கூட அங்க போக வேண்டும், இங்க போக வேண்டும் என்கிற எந்த ஆசையும் நிறைவேற வில்லை. அவள் அப்பா கடைசி காலத்தில் சும்மா இருந்தபோது அவர் பேசினது அவளால் கேட்க முடியவில்லை. ஏனெனில் அவள் வேறு வீட்டுக்கு போய் விட்டாள். பார்த்தியா வாழ்க்கையை?

நீ உன் பெண்ணுக்கு அப்படி ஒரு வாழ்க்கையை கொடுத்து விடாதே. உன் மனைவியை அவளோட மகனுக்கு கடிதம் எழுத வைத்து விடாதே. நீ இப்ப உழைப்பது உன்னோட அடுத்த பத்து வருஷம் கழிச்சி செலவழிக்க போறதுக்குத்தான். அதனை கொஞ்சம் குறைத்துக்கொள். சீக்கிரம் வீட்டுக்கு வா. பொண்டாட்டிக்கிட்ட, குழந்தைகள்கிட்ட பேசு, அவர்களுக்கும் நீ நல்லா இருக்கும்போதே கொஞ்சம் நேரம் கொடு.

ஏனெனில் அன்புக்காக காத்துக்கொண்டு இருக்கிறதும் ஒருவரை காக்க வைப்பதும் ஒரு வாழ்க்கையா?

நீ இதனை செய்வாய் என நம்புகிறேன். ஏனெனில் என்னிடம் நல்லா பேசின பையன்தானே நீ? உன் மனைவி மகளை விட்டுவிடவா போகிறாய்?

* * *

## அன்பு

**அன்பு**
**என்ற தலைப்பில்**
**மிகச்சிறிய**
**கவிதை கேட்டார்கள்...**

**“அம்மா”**
**என்றேன் உடனே!**

**கேட்டது**
**அம்மாவாக இருந்தால்**
**இன்னும் சின்னதாய்**
**சொல்வேன்**

**“நீ...” என்று.**

* * *

# ௩. அம்மா...!

இந்த உலகை படைத்த இறைவன் அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்க முடியாது என்பதால், ஒவ்வொரு மனித உயிருக்கும் தனது உருவாக தாயைக் கொடுத்தார். அன்னையும், ஆண்டவனும் தனித்தனி வடிவங்கள் இல்லை என்பதை உலகிற்கு இந்த தத்துவம் மூலம் இறைவன் உணர்த்தியிருக்கிறான். இறைவனின் படைப்பில் தன்னலம் கருதாத படைப்பு ஒன்று உண்டு என்றால் அது அன்னை மட்டுமே என்றால் அது மிகையாகாது. அம்மா என்ற சொல்லை தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் சிறப்பாக எடுத்து இயம்ப முடியாது என்பது உலகறிந்த தமிழ் அறிஞர்கள் கருத்தாகும்.

அம்மா எனும் வார்த்தையின் 'அ' முதல் எழுத்து உயிர் எழுத்து. கருவில் உயிர் கொடுக்கிறாள் என்பதை விளக்குகிறது. கருவில் உருவான உயிர் உருவாக்கம் பெறுவதற்கு, தாய் உடல் (மெய்) கொடுக்கிறாள் என்பதை குறிக்கவே 'ம்' எனும் மெய் எழுத்து அமைந்தது. தான் உருவாக்கிய குழந்தையை பத்து மாதங்கள் சுமந்து, பெற்று, உலகின் வெளிச்சத்தை காண வழிகாட்டுகிறாள் என்பதையே கடைசி எழுத்தான உயிர்மெய் எழுத்தான 'மா' குறிக்கிறது. இந்த தத்துவத்தை உலகிற்கு உணர்த்தவே உயிர், மெய், உயிர்மெய் என மூன்று எழுத்துக்கள் சேர்ந்து அம்மா என்ற சொல் உருவாக்கம் பெற்றது.

மற்ற நாடுகளை போல் அல்லாமல் இந்தியாவில் மட்டும் பெண் என்பவள் தாயாக பார்க்கப்படுகிறாள். இந்தியாவில் பெண் என்பவள் தாயாக தரிசனம் தரும் தெய்வம். அவள் தனது முழு வாழ்க்கையையும் தாய்மைக்கே அர்ப்பணிக்கிறாள். இது சிகாகோ மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் இந்திய பெண்ணின் நிலைபற்றி பெருமையாகப் பேசியது.

இது போல், அன்னையின் பெருமை குறித்து அறியாதவர்கள், பேசாதவர்கள் இந்த உலகில் யாருமே இருக்க முடியாது. வணங்க வேண்டிய அன்பின் வடிவமான அன்னையை வருத்தப்பட வைக்கக்கூடாது என்று உறுதி ஏற்போம்.

* * *

புகைவண்டியில்
பிதுங்கி வழியும்
பெருங்கூட்டத்தில்
ஊர் போய்ச் சேர
ஒற்றைக்காலில்
நின்றுகொண்டு
எட்டு மணிநேரம்
ஒருவன்
பயணிக்க முடிவதன்
மூன்றெழுத்துக் காரணம்
**அம்மா!**

* * *

# 4. ஒரு தாயின் வேதனையான கேள்வி

*கேள்வி :*

என் மகளின் புகுந்த வீட்டில் அவளது மாமனார் கடுமையாக நடந்து கொள்கிறார். எங்களிடமும் மிரட்டலாகப் பேசுகிறார். மகனை கைக்குள் போட்டுக்கொண்டு எங்கள் வாழ்க்கையைப் பாழாக்கி வருகிறார். தினசரி காலையில் எழுந்ததும் என் மகள் என்ன பாடு படுகிறாளோ என்ற வேதனையோடுதான் நான் கண் விழிக்கிறேன். எந்த தெய்வத்தை வழிபட்டால் எங்களுடைய துன்பம் தீரும்?

*எழுத்துச்சித்தர் திரு. பாலகுமாரனின் பதில் :*

உங்கள் நிலைமை எனக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிகிறது. மகளைப் பெற்ற எல்லா பெற்றோரும் அடி வயிற்றில் ஒரு பயத்தை சுமந்து கொண்டுதான் இருக்க வேண்டும். குழந்தைகள் சிறப்பாக வாழ இடையறாது ஒரு கவலையை அனுபவித்துதான் ஆக வேண்டும்.

ஆனால், இந்தக் கவலையிலிருந்து மீட்சி பெற நல்ல விஷயங்கள் உண்டு. அதற்கு பிரார்த்தனை என்று பெயர். இந்தப் பிரார்த்தனையை வெறுமே வெட்ட வெளியில் சொல்லாது ஒருமுகப்படுத்துகிற விஷயங்கள் தான் விக்ரக ஆராதனைகள், மந்திர உச்சாடனங்கள். இந்தச் சம்பவம் நீர்த்துப் போகாமல் ஓர் கொடுமைக்காரனை நேர் செய்ய வேண்டி முயற்சிக்க வேண்டும். அவனின் நிவர்த்தியினால் உங்கள் குழந்தை சுகம் பெறுவாள். உங்கள் வீடு வளம் பெறும்.

ப்ரத்யங்கரா என்ற தேவதை உண்டு. அந்த ப்ரத்யங்கரா உபாசனை முரட்டுத்தனமாக, மூர்க்கத்தனமாக, எகிறுபவர்களை அடக்குவதற்கு உதவி செய்யும். உங்களை நோக்கி சீறுகிறவர்களை தலையில் தட்டி உட்கார வைக்கும்.

ப்ரத்யங்கராவோடு கோயிலில் இருக்கின்ற காலபைரவர் உபாசனையும் அதற்கு உதவி செய்யும். ப்ரத்யங்கரா தேவி கோயிலுக்குப் போய் கை கூப்பி, மனம் உருகி பிரார்த்தனை செய்யுங்கள். காலபைரவர் சன்னதியில் உட்கார்ந்து உங்கள் குழந்தையின் துன்பம் நீங்க மன்றாடுங்கள்.

அம்மாதிரியான தலங்களுக்குப் போய் உங்கள் மகளுக்காக பிரார்த்தனை செய்யுங்கள். உங்களைத் துன்புறுத்து - பவர்களின் அட்டகாசம் நிச்சயம் குறையும்.

மரணபயம் மிகப்பெரிதான விஷயம். எல்லா ஆட்டங்களையும் அது அடித்து நொறுக்கும். கால் தடுக்கி விழுந்தால் மரணமடைகின்ற வாழ்க்கை உன்னுடையது என்று அறிவுறுத்தும்.

அமைதியற்ற குணம்தான் ஆரவாரமாக அலைகிறது. அதுதான் அடுத்தவரை தூஷிக்கிறது என்று புரிய வைக்கும். கால் வலியோ, நெஞ்சு வலியோ, கண்ணீரோ,

மூல வியாதியோ, நெற்றி தலைச்சூடோ அம்மாதிரி ஆரவாரமான ஆட்களுக்கு நிச்சயம் ஏற்படும். அவை அதிகரிக்கிற பொழுது அவர்கள் மௌனமாகக்கூடும்.

இந்தப் பிரார்த்தனையை ஒருவர் செய்ய, அவருக்கு தொந்தரவு கொடுத்தவர் துவண்டு போனதை நான் நன்கு அறிவேன். அறிவால் எதிர்க்க முடியாதபோது தெய்வத்தின் துணை உங்களை தீயவரிடம் இருந்து நிச்சயம் காப்பாற்றும்.

ப்ரத்யங்கரா நாமத்தையும், காலபைரவர் நாமத்தையும் இடையறாது உச்சரியுங்கள். உங்களுக்குள் மாற்றம் ஏற்படுவதை, உங்கள் மகளின் வாழ்க்கை மேன்மை நோக்கி நகருவதை நீங்கள் உணர்வீர்கள்.

* * *

இவ்வளவு வயதாகியும்,
புதுச்சட்டைக்கு
மஞ்சள் வைத்து
வருபவனைக் கேலி செய்யும்
நண்பர்களே....
அது, அவன் வைத்த
மஞ்சள் அல்ல!
அவன்
அம்மா வைத்த மஞ்சள்!

* * *

## அன்னையின் அருமை

பிறந்த வீட்டை விட்டு புகுந்த வீடு
போகும் வரை தெரியவில்லை
அம்மாவின் அருமை...
எட்டு மணிவரை தூங்கினாலும்
எழுப்ப யோசித்த அம்மாவின் அருமை
ஐந்து மணிக்கு அலாரம் அடித்தபோது
தெரிந்தது...
படித்த புத்தகத்தை படுக்கையிலே
போட்டாலும்
பார்த்து எடுத்து வைத்த அம்மாவின்
அருமை
எதையும் எடுத்த இடத்தில் வைக்க
வேண்டும்
என்ற போது புரிந்தது...
பசித்த நேரத்தில் சோறூட்டிய
அம்மாவின் அருமை
பத்துப்பாத்திரம் தேய்க்கையில் தெரிந்தது...
என்னை பத்து மாதம் சுமந்த
அம்மாவின் அருமை
எனக்கு குழந்தை பிறக்கையில்
முற்றிலும் புரிந்தது.

* * *

அத்தி பூத்தாற்போல
அப்பனும்
மகனும்
பேசிச் சிரித்தால்
விழாத தூசிக்கு
கண்கள் தேய்த்துக்கொண்டே
அப்பால் நகர்கிறார்கள்
அம்மாக்கள்!

* * *

# 5. அம்மா – நீ சும்மாதானே இருக்கே...

எல்லோரும் கூறுகின்ற இந்த வார்த்தையை இப்பொழுது குழந்தைகள் கூட சொல்ல ஆரம்பிச்சிட்டாங்க. நீ சும்மாதானம்ம இருக்க, இதை செஞ்சி குடுத்திடும்மா.

எல்லாரும் சொல்றது போல ஒரு நாள் சும்மா இருந்தா என்னன்னு தோணுச்சு. வீட்டில் உள்ள அனைவரும் கிளம்பிட்டாங்க. அவரவர்க்கு தேவையான உணவுகளை சமைத்து கொடுத்து விட்டேன். இன்றைக்கு சும்மா இருப்போம், என்னதான் ஆகும் பார்ப்போம் என சும்மா இருந்தேன். மாலை கணவரும், பசங்களும் வீட்டிற்கு திரும்பினார்கள். 'அம்மா பசிக்குது மா... ஏதாவது எடுத்துட்டு வாம்மா' என்று மகனும் 'எனக்கு தலை வலிக்குது ஒரு காபி போட்டு தா' என்று கணவரும் சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. வாசல் முழுவதும் குப்பையால் நிறைந்து இருக்கிறது. வீட்டின் உள்ளே சென்றால் காலையில் செல்லும் பொழுது இரைத்த பொருட்கள் அனைத்தும் நாற்காலியில் இருக்கிறது. ஷ் பாலீஷ் செய்யும் டப்பா திறந்தே இருக்கு. தலைக்கு தடவும் ஜெல்லும் ஒபன் பண்ணி இருக்கு. பசங்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. அவர்கள் புத்தகங்கள் ஆங்காங்கே இருக்கிறது. விளையாட்டு பொருட்கள் இரைந்து கிடக்கின்றன. சீருடைகள் தோய்க்காமல் அப்படியே போடப்பட்ட இடத்தில் இருக்கின்றது. அம்மா எங்கதான் போனாங்கன்னு சமையல் அறைக்குள் சென்று பார்த்தால் பாத்திரங்கள் கழுவாமல் நாற்றம் அடித்துக் கொண்டு இருக்கிறது. 'எங்கதான் போனாளோ.. உடம்பு சரி இல்லையோ? என்று சொல்லிக் கொண்டே அம்மா அறைக்கு சென்றார் அப்பா. இரவு உபயோகப்படுத்திய தலையணை, போர்வை எல்லாம் மடித்து வைக்காமல் இரைந்து கிடக்கின்றன. சரி, குளியல் அறையில் இருப்பாள் கதவு தட்டி பாக்கலாம்னு திறந்தா, காலையில் போட்ட சோப்பு டப்பா முழுவதும் தண்ணீரில் மூழ்கி கரைந்து போய் தரை முழுவதும் கொழ கொழன்னு ஆகிடுச்சு. அழுக்கு துணிகள் அசிங்கமாய் தொங்கிக் கொண்டு இருந்தன. ஒன்றும் புரியாமல் பதற்றத்துடன் மாடியில் உள்ள அறைக்குள் சென்றார்கள். கையில் ஒரு புத்தகத்துடன் அமர்ந்து அம்மா தேநீர் அருந்தி கொண்டு இருந்தாள். 'என்னடி ஆச்சு உனக்கு? வீடு ஏன் இப்படி இருக்கு?' என்று கணவரும், 'அம்மா... என்ன ஆச்சும்மா உனக்கு?' என்று பசங்களும் ஒரே நேரத்தில் கேட்டனர்.

'நீங்க எல்லோரும்தான் சொல்லிட்டு போனீங்க, வீட்ல சும்மாதான் இருக்கேன்னு. அதான் சும்மா இருக்கலாம்னு!'

கணவனுக்கு தன் தவறு உணர்ந்தது. இந்த வார்த்தையை சொல்வது தவறு. அவ எதுவும் செய்யவில்லை என்றால் வீடு வீடாகவே இருக்காது "என்னை மன்னித்து விடு" என்று

கூறினார். பிள்ளைகளும் தன் தவற்றை உணர்ந்து "அம்மா மன்னிச்சிடும்மா.. இனி அப்படி சொல்ல மாட்டோம். நீ இல்லைன்னா வீடு எப்படி இருக்கும்னு தெரிஞ்சுகிட்டோம்."

நான் சொல்வதால்தான் என் பசங்களும் இந்த வார்த்தையை அவகிட்ட சொல்லி கஷ்டப் படுத்தறாங்கன்னு அவருக்கு புரிந்தது. இனி எப்போதும் தன் மனைவியை பிள்ளைகளிடமோ, வெளி ஆட்களிடமோ தாழ்த்தி பேச மாட்டேன் என்று மனதிற்குள் ஒரு முடிவு எடுத்தார். "நீ இங்கேயே இரு. நான் போய் உனக்கு காபி போட்டு எடுத்துட்டு வரேன்னு" கணவர் கிளம்பினார். பசங்களும் "நாங்க உனக்கு ஸ்நாக்ஸ் எடுத்துட்டு வரோம்மா, நீங்க வெயிட் பண்ணுங்கம்மா " என்றனர்.

யாரும் எதுவும் செய்ய வேண்டாம். எல்லோரும் போய் டிவி பாருங்க. நான் பத்து நிமிடத்தில் உங்களுக்கு கேசரி செய்து தரேன் சாப்பிடுங்க என்ற அம்மா, மனதில் சந்தோஷத்துடன் சமையல் அறைக்கு சென்றாள்.

இதுதான் அம்மாவின் குணம்.

அம்மா...அம்மாதான்!

* * *

**அடுப்படியே**
**அம்மாவின் அலுவலகம்!**
**அன்பு மட்டுமே**
**எதிர்பார்க்கும் சம்பளம்!**

* * *

## தாய்

முன்னிரண்டு மாதங்கள் என்னை அறியாமல் குழம்பித் தவித்தாய்!
மூன்றாம் மாதம் உன் வயிறு என்ற சிப்பிக்குள் முத்தாய் நானிருப்பதை அறிந்தாய்!
நான்காம் மாதத்தில் மசக்கை அனுபவித்தாய்!
ஐந்தாம் மாதத்தில் அறுசுவை உணவு உண்டு என்னை மகிழ செய்தாய்!
ஆறாம் மாதம் பால் சுரக்க உள்ளத்தில் இன்பமுற்றாய்!
ஏழாம் மாதம் என் அசைவுகளை உணர்ந்தாய்!
எட்டாம் மாதம் நான் உதைப்பதை அழகாய் ரசித்தாய்!
ஒன்பதாம் மாதம் நான் அஞ்சி விட கூடாது என பலவித வளையல்களை அணிந்தாய்!
பத்தாம் மாதம் ஒருமுறை நான் அம்மா என அழைப்பதற்காக பலமுறை அம்மா அம்மா என பிரசவத்தில் அலறினாய்!
என் பசி போக உன் இரத்தத்தை பாலாக்கினாய்!
நான் பிறந்த பின் என்னை இவ்வுலகத்திற்கு அறிமுகப்படுத்தினாய்!
நான் வளர்ந்த பின் எனக்கு இவ்வுலகத்தை அறிமுகப்படுத்தினாய்!
இவ்வளவு செய்த உனக்கு நான் என்ன செய்வது !
அடுத்த ஜென்மத்தில் கடவுள்கிட்ட கருவறை கேட்டு உன்னை மகளாய் சுமக்கிறேன் !
அன்பு அன்னையே!

* * *

# ௬. நன்றிம்மா...!

அன்புள்ள அம்மா!

எல்லா பெண்களையும் போலவே கல்யாண கனவில் களித்து குதூகலமாக ஆடம்பரமாக திருமணம் புரிந்து கொண்டேன். பின்னர்தான் தெரிந்தது, வாழ்க்கை சினிமாவில் போடும் சுபத்திற்கு பின்புதான் தொடங்குகிறதென்று.

வாழ்க்கையில் விரும்புவது விரும்பப் படுவதென்பதையும் தாண்டி நிறைய இருக்கிறது என்று தெரிய வருகிறது.

எத்தனை பொறுப்புகள்?

எத்தனை சுமைகள்?

எத்தனை எதிர்பார்ப்புகள்?

எத்தனை தியாகங்கள்?

எத்தனை ஏமாற்றங்கள்?

நினைத்த நேரத்தில் முழு தூக்கம், தூக்கம் கலைந்த நேரத்தில் எழுந்திருக்க முடியவில்லை, குடும்பத்தில் மற்றவர் விழிக்கும் முன் நான் விழித்து, என் வேலைகளை ஆரம்பிக்க வேண்டி இருக்கு.

உன்னோடு இருந்த நாட்களில் எனக்கென்று விருப்பமான உடைகளில் சிட்டாக பறந்து கொண்டிருந்தேனே.

இங்கே, அவர்கள் விரும்பிய உடையில் வலம் வருவதையே விரும்புகின்றனர்.

இதோ என் தோழியைப் பார்த்து விட்டு வருகிறேன் என்று உன்னிடம் சொல்லிவிட்டு சென்றது போல் சொல்லிச் செல்ல இயலவில்லை.

என் தேவைகளை விட அடுத்தவர் தேவைகளை முன் வைத்தே நான் நடந்து கொள்ள வேண்டி இருக்கு. எனக்கு விருப்பமான டிவி நிகழ்ச்சியைக் கூட பார்க்க முடிவதில்லை.

சில நேரங்களில் எதற்கு இந்தத் திருமணம் என்று அலுப்பாக இருக்கிறது. இந்தத் திருமணம் என் சுதந்திரத்தை அல்லவா பறித்து விட்டது. என் சுயத்தை அல்லவா சூறையாடி விட்டது.

உன்னிடம் இருந்த போதே மிக மகிழ்வாக இருந்தேனே. உன்னிடம் திரும்ப வந்து விடலாமா என்று கூட தோன்றுகிறது. உன் மடியில் படுத்துக் கொள்ளனும் போல இருக்கிறது அம்மா.

“வேண்டாம்...வேண்டாம்” என்று நான் சொல்ல சொல்ல “ஒரே ஒரு இட்லி போட்டுக்கோ”.

‘உனக்கு பிடிக்குமேன்னு பால்கோவா செஞ்சேன்னு’ நீ பின்னாலேயே வந்து வந்து ஊட்டி விட்டு என்னை கொஞ்ச வேண்டும் போலிருக்கிறது.

எந்த கவலையும் இல்லாமல் உன் அரவணைப்பில், உன் கொஞ்சலில் உன் பாதுகாப்பிலேயே இருந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது.

ஆனால், அடுத்த கனமே நீயும் என் வயதில் என்னை மாதிரிதானே உணர்ந்திருப்பாய் ?

நீ உன் திருமணத்தில் செய்த தியாகங்களை தானே எனக்கு இந்த அழகிய நினைவுகளைக் கொடுத்திருக்கிறது.

நீ அன்று, நான் இன்று நினைப்பது போல் நினைத்திருந்தால், நான் இன்று இருப்பேனா? நீ செய்த தியாகங்களையும், உழைப்பையும், பாசத்தையும், எதிர்பாரா அன்பையும் நான் திருப்பித்தர வேண்டாமா என்று நினைத்துக் கொள்கிறேன்.

அதுவும் உன்னிடம் இருந்து கற்றதுதான். அப்படி நினைக்கும்போது வாழ்க்கையே எளிதாக தெரிகிறது. தெளிவாக புரிகிறது.

காலம் செல்லச் செல்ல நீ உன் குடும்பத்தை நேசித்தது போல் நானும் என் குடும்பத்தை நேசிக்க ஆரம்பித்து விடுவேன்.

நீ செய்த தியாகங்களை நானும் செய்ய தயாராகி விடுவேன். உனக்கு நாங்கள் கொடுத்த மன உறுதியை, திடத்தை என் குடும்பமும் எனக்கு தரும்.

ஆமாம்மா.... நீ எனக்கு கொடுத்ததை நானும் என் குடும்பத்திற்கு கொடுக்க தயாராகி விட்டேன்.

நன்றிம்மா!

என்றும் அன்புடன்

உன் அன்பு தேவதை

* * *

இந்த அம்மாக்கள்
தோசைக்கல்லில்
நிலவு வார்ப்பவர்கள்

* * *

அப்பா கட்டிய
வீடாயிருந்தாலும்
அது எமக்கு
அம்மா வீடுதான்!

* * *

அப்பா வாசம்
வெயில் வாசம்!
அம்மா வாசம்
நிலா வாசம்!
எமது
சமையலறையெங்கும்
நிலா வாசம்!

* * *

இங்கே பலரது
அகராதியில்
வீடு என்கிற
சொல்லுக்கு நேரே
அம்மா என்று
உள்ளது!

* * *

# 7. அன்புள்ள மகனே!

தன்னைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய தன் தாய் மரணப்படுக்கையில் அவஸ்தைப் படுவதைப் பார்க்க சகிக்காமல் மிகவும் வருந்தினான் மகன்.

தாயின் கைகளை தன் கைகளால் ஆதரவுடன் பற்றினான். ஏதோ சொல்ல வருகிறாள். தொண்டையிலிருந்து குரல் வெளி வரவில்லை. அருகிலேயே அவன் தந்தை மிகுந்த வருத்தத்துடன் அமர்ந்துள்ளார்.

தலையணிக்கு அடியிலிருந்து ஒரு பதிவு செய்த ஒலிநாடாவை எடுத்து மகனிடம் கொடுத்து, போட்டு கேட்கச் சொல்லுகிறாள். ஒலி நாடாவில் அவன் தாயின் குரல் மிகத் தெளிவாக ஒலிக்க ஆரம்பிக்கிறது.

அன்புள்ள மகனே...

"எரியும் விளக்கில் திரி முந்தியோ அல்லது எண்ணெய் முந்தியோ" என்பது போல உன் அப்பாவுக்கு முன்பாக நான் இந்த உலகை விட்டு இன்னும் சில நாட்களுக்குள் போய் விடுவேன் என்று தோன்றுகிறது. என்னால் இப்போது சுத்தமாகப் பேச முடியவில்லை. இதுபோல ஒரு நாள் என் நிலைமை முற்றிவிடும் என்று எதிர்பார்த்த நான், இதுவரை உன்னிடம் நேரடியாக பேசத் தயங்கிய பல விஷயங்களை மனம் விட்டுப் பேசி பதிவு செய்திருக்கிறேன்.

நான் சுமங்கலியாக பூவுடனும், பொட்டுடனும் போய்ச் சேர்ந்து விட்டதாக இந்த உலகம் நாளை பேசும். ஆனால் சூதுவாது தெரியாத அப்பாவியான குழந்தை மனம் கொண்ட உன் அப்பாவைத் தவிக்க விட்டுச் செல்கிறேனே என்ற ஒரே கவலை தான் என் மனதை வாட்டி வருகிறது.

எங்களின் ஒரே பிள்ளையான நீ, வயதான எங்களுக்கு எல்லாவித வசதிகளும் செய்து கொடுத்துள்ளாய். நிறைமாத கர்ப்பிணியாகிய உன் மனைவியும் எங்களின் சொந்த மகளைப் போலவே எங்களிடம் அன்பு செலுத்தி வருகிறாள்.

இருப்பினும், வயதான எங்களிடம் நீ சில சமயங்களில் கடுகடுத்த முகத்துடன் எரிந்து விழுந்து கோபமாக பேசிவிடுகிறாய். உன் சுபாவம் தெரிந்த நான் அதை பெரியதாக எடுத்துக் கொள்ளாமல் விட்டு விடுவேன். ஆனால் அதுபோன்ற சமயங்களில் உன் அப்பாவின் குழந்தை மனம் உடைந்து நொறுங்கிப் போனது உண்டு. இதை பலமுறை உணர்ந்த நான் அவருடன் ஆறுதலாகப் பேசி சமாதானம் செய்துள்ளேன்.

உன் கடமைகளைச் செவ்வனே செய்து வரும் நீ, உன் அப்பாவின் உண்மையான, நியாயமான எதிர்பார்ப்புகளை புரிந்து நடந்து கொள்ள வேண்டும் என்பதை உனக்கு எடுத்துச் சொல்வதே இந்த ஒலிநாடாவின் நோக்கம்.

செல்போன், கம்ப்யூட்டர், இண்டர்நெட், வாஷிங்மெஷின், ஏ.ஸி போன்ற நவீன தொழில் நுட்ப சாதனங்களைப் பற்றி புரிந்து கொண்டு இயக்கத் தெரியவில்லை என்று எங்களிடம் கோபப்படுகிறாய். வயதான எங்களுக்குப் புரியும்படியாக விளக்க உனக்குக் கொஞ்சமும் பொறுமை இருப்பதில்லை.

நீ சின்னக் குழந்தையாய் இருந்தபோது உன் அப்பா உன் பாடங்களில் உனக்கு ஏற்பட்ட பல்வேறு சந்தேகங்களை உன் மனதில் பதியும் வரை எவ்வளவு பொறுமையாக, அழகான கதைகள் மூலமும், படங்கள் மூலமும் தகுந்த உதாரணங்களுடன் விளக்கிப் புரிய வைத்தார் என்பது எனக்கு இன்னும் பசுமையாக நினைவில் உள்ளது.

வயதான அவரைப்போய் உங்கள் சாப்பிடும் கைகள் அழுக்காக உள்ளன. சுத்தமான சுகாதாரமான நாகரீக உடைகள் அணிவதில்லை, யாராவது வீட்டுக்கு வந்தால் அமைதியாக இருப்பதோ, நாகரீகமாக ஒரு சில வார்த்தைகளுடன் பேசி முடித்துக் கொள்வதோ இல்லை என்றெல்லாம் குறை கூறுகிறாய்.

உன் குழந்தைப் பருவத்தில் குளிக்க வரவே அடம் பிடித்த உன்னைத் தாஜா செய்து, பாத் ரூம் அழைத்துப் போய், சோப்புப் போட்டுத் தேய்த்து குளிப்பாட்டி நீயாகவே எப்படி தினமும் ஆசையாகக் குளிக்க வேண்டும், எப்படி அழகாக உடை அணிய வேண்டும், எப்படி தலைக்கு எண்ணெய் தடவி சீப்பினால் சீவி அலங்கரித்துக் கொள்ள வேண்டும், பிறரிடம் எப்படி நாகரீகமாகவும், அன்பாகவும் நடந்து கொள்ள வேண்டும், வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்படும் எதிர்பாராத பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று உனக்கு எல்லாம் கற்றுக் கொடுத்தவரே உன் அப்பாதானே என்பதை மறந்துவிட்டு இன்று அவரின் முடியாத வயோதிக நிலைமையில், அவரை உன் விருப்பத்திற்கு கட்டுப்படுத்த முயல்வது எப்படி நியாயமாகும். அடிக்கும் காற்றில் மரத்திலிருந்து விழப்போகும் பழுத்த இலையைப் பார்த்து, துளிர்விடும் பச்சை இலை கேலி செய்யலாமா?

வயதாக வயதாக ஐம்புலன்களும், உடலும், உள்ளமும் சோர்வடைந்து எங்களுடன் ஒத்துழைக்க மறுக்கின்றன. ஞாபக மறதி ஏற்படுகிறது. காது சரிவர கேட்பதில்லை, கண்களில் பார்வை குறைபாடு ஏற்படுகிறது, எதையுமே மின்னல் வேகத்தில் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஞாபகப்படுத்திக் கொள்ள நீண்ட நேரம் ஆகின்றது. கால்களில் உறுதி குறைந்து நடக்கவே கஷ்டமாக உள்ளது. தடிக்குச்சி ஊன்றி நடக்க வேண்டியுள்ள எங்களை நீ புரிந்து கொள்ள வேண்டும்.

நீ, நீந்தி, தவழ்ந்து, பிறகு பிடித்துக்கொண்டு நிற்க ஆரம்பித்து, அதன்பின் ஒரு நாள் திடீரென்று தத்தித்தத்தி முதல் அடி எடுத்து வைத்த அந்த பொன்னான நாட்களில், நாங்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் உன்னைக் கீழே விழாமல் தாங்கித் தடுத்திருப்போம். வயதான நாங்களும் இன்று அது போன்ற ஒரு குழந்தையே என்பதை நீ உணர வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வயதான பழமான நாங்களும், மேலும் மேலும் வாழ விரும்புவதில்லை. ஏதோ இறுதி மூச்சை எதிர்பார்த்து, நாட்களைக் கடத்தி வருபவர்களே நாங்கள்.

எங்களையும் அறியாமல், நாங்களும் தலைமுறை இடைவெளியால் உங்களுடன் ஒத்துப்போக முடியாமல் ஏதாவது தவறாகவே கூட நடந்து கொண்டாலும் நீ என்றும் நன்றாக இருக்க வேண்டும் என்பதே எங்களின் மனப் பூர்வமான விருப்பமும், வேண்டுதலும் ஆகும்.

எங்கள் மரணம் கூட உன் பார்வையிலேயே நீ எங்கள் அருகில் இருக்கும் போதே, உன் மடியிலேயே நிகழ வேண்டும் என்பதே எங்களின் ப்ரார்த்தனை.

உனக்கு ஒரு மகனோ அல்லது மகளோ பிறந்த பின்புதான், அதாவது நீயும் ஒரு அப்பா ஆன பிறகுதான், உனக்கு உன் அப்பா அம்மாவின் அருமையும், பெருமையும், பொறுமையும் விளங்கி புரிய ஆரம்பிக்கும் மகனே.

எங்களுக்கு எப்போதும் உன் அன்பு வேண்டும், உன் ஆதரவு வேண்டும், உன் கனிவான பேச்சு வேண்டும், எங்களின் ஒரே மகனான உன்னிடம் பேசாமல் நாங்கள் வேறு யாரிடம் பேசி அந்த உண்மையான அன்பை உரிமையுடன் பெற முடியும்? புரிந்து கொள் மகனே!

இறுதிவரை புன் சிரிப்புடன் நீ எங்கள் மேல் அன்பு செலுத்தி, எங்களின் மன அமைதியுடன் கூடிய இறுதிப் பயணத்திற்கு உதவி செய். முதலில் நான் புறப்படுகிறேன். உன் அப்பாவாவது தன் பேரனையோ, பேத்தியையோ ஆசை தீரக் கொஞ்சி விட்டு வேறு ஒரு நாள், என்னிடம் பத்திரமாக வந்து சேர உதவி செய்வாயா? மகனே."

ஒலிநாடா இத்துடன் ஒலித்து ஓய்ந்தது.

மகனிடம் பேச வேண்டியதெல்லாம் தயக்கம் இன்றி பேசிவிட்டோம். இனி துயரம் இல்லை என்று நினைத்தபடி அந்த தாயின் உயிரும் பிரிந்தது.

* * *

**'அம்மா'**
என்ற உறவு இல்லாவிட்டால்
இந்த உலகமே அனாதைதான்!

* * *

என் முகம் பார்க்கும் முன்பே..
என் குரல் கேட்கும் முன்பே..
என் குணம் அறியும் முன்பே..
என்னை நேசித்த ஒரே
மனித இதயம்..
**என் அம்மா** மட்டும்தான்.

* * *

மகனே!
என் கல்லறையின் மீது
உன் பெயரை எழுதி வை..
உன்னை நினைப்பதற்கு அல்ல..
அங்கும் உன்னை சுமப்பதற்கு!

* * *

நான் ஒரு முறை 'அம்மா'
என்றழைப்பதற்காக...
பிரசவ நேரத்தில்
'அம்மா..அம்மா' என்று
கதறியவள்தான்
**என் அம்மா..**

* * *

# 8. போனால் போகிறது விடு...

அம்மா... உன்னிடம் எனக்கு மிகவும் பிடித்தமான குணம், உன்னுடைய "போனால் போகிறது விடு" என்று எவரையும், அது எப்பேர்ப்பட்ட தவறாக இருப்பினும், ஒதுக்கி மன்னித்து, மறக்கத் தயாராக இருப்பதுதான். இப்போது மனோ தத்துவம் படித்த பிறகு, 'கருப்புப் புள்ளியைப் பார்த்துக் கொண்டிருந்தால் வாழ்க்கையே கருப்பாகி விடும். ப்ளஸ்களை எண்ணிப் பார்த்து பாஸிட்டிவாக வாழப்பழகு' என்கிற சமாதானங்கள், விளக்கங்கள் புரிகின்றன. ஆனால், அம்மா... நீ எந்தப் பள்ளியில், எந்த ஆசிரியரிடம் படித்தாய், இப்படி 'போனால் போகிறது, ஏதோ தெரியாத்தனம்' என்று ஆத்மார்த்த அன்போடு சொல்லி அத்தனை பேரையும் அரவணைத்துக் கொண்டு செல்ல?

பல வருடங்களுக்கு முன், உன் திருமண வாழ்க்கையின் துவக்க காலத்தில் உனக்குக் கெடுதல் செய்தவர்களைக் கூட, பின்னாளில் அனுசரித்தும் அல்லாமல், 'இது எப்படி சாத்தியமாகிறது, அம்மா?' என்று பலமுறை கேட்டிருக்கிறேன். அழகாய் புன்னகைப்பாய். சின்னக் குரலில் "ஏதோ தெரியாத்தனம். போனால் போகட்டுமென்று விடக் கற்றுவிட்டால், எந்தக் கசப்பும் இல்லாமல் நம் வாழ்க்கை நிம்மதியாய் இருக்கும்" என்பாய். சாஸ்திர நூல்கள் வெளிப்படுத்தும் உயர்ந்த தத்துவச் சிந்தனைகளை உன்னுடைய கண்ணோட்டத்தில் இப்படி எளிமையாகக் கூறியது. உன் புத்திசாலிதனமா, அல்லது இயல்பா?

எனக்கு ஆறு வயதாகும்போது, பெரியப்பாவும் அவர் மனைவியும் அடுத்தடுத்த மாதங்களில் சற்றும் எதிர்பாராத விதமாய் இறந்து போனார்கள். குடும்பமே கதி கலங்கிப் போன அத்தருணத்தில், பெரியப்பாவின் காரியங்கள் முடிந்த கையோடு அவரது வீட்டை ஒழித்து, மருத்துவக் கல்லூரியிலும், பள்ளியிலும் படித்துக் கொண்டிருந்த அவருடைய மகனையும், மகளையும் அப்பா நம் வீட்டுக்கு அழைத்து வந்த நாளிலிருந்து "எனக்கு 3 ஆண், 3 பெண் குழந்தைகள் " என்று அவர்களையும் சேர்த்து நீ சொல்லித்தான் கேட்டிருக்கிறேன். சொந்தக் குழந்தைகளைப் போல் அவர்களை நடத்தித்தான் பார்த்திருக்கிறேன்.

தாழம்பூ நிறம், வாட்டசாட்டமான உடம்பு, ஒன்பது கஜப்புடவை, மூக்கின் இரு பக்கங்களிலும் ஜொலிக்கும் மூக்குத்திகல், பிச்சோடா, வளைந்த மல்லிகை, பெரிய குங்குமப் பொட்டு, கலீரென்று ஓசை எழுப்பும் வண்டிச்சகட மெட்டிகள்... அப்பா இருந்த வரையில், ரவிவர்மாவின் ஓவியம் ஒன்று உயிர் பெற்றுவிட்ட மாதிரிதானே நீ வளைய வந்தாய்... அம்மா!

சங்கீதப் பின்னனியில் வந்த நீ, சங்கீதத்திலும் கற்பனைத்திறனிலும் திறமை பெற்று விளங்கியதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஆனால், 14 வயதில் திருமணமாகி புக்ககம் போன பிறகு, 'பாட்டும் கூத்தும் நமக்கு சரிப்பட்டு வராது' என்ற அதட்டல் எழுந்ததும், ஆசை ஆசையாய் எழுதிய முதல் கதை கிழிக்கப்பட்டு அடுப்புத் தீக்குத் தீனியாக்கப்பட்டதும் நடந்தது நிஜம். இதனாலெல்லாம் உடைந்து போகாததோடு, அப்படிச் செய்தவர்கள் மேல் கிஞ்சித்தும் கோபமோ கசப்போ இன்றி நீ வளைய வந்தது எனக்குப் பெரும் வியப்பைத் தந்த சமாச்சாரம்.

‘எப்படிம்மா?’ என்றால், அழகாய் சிரிப்பாய், அப்புறம், “போனால் போகிறது.. ஏதோ தெரியாத்தனம். பெரிசு பண்ணாமல் விட்டு விட்டால், குடும்பம் நிம்மதியாய் இருக்கும்” என்பாய், உன் சுபாவத்தின்படி.

ஆனால், நிறைவேறாத கனவுகளை உன் பெண்கள் மூலம் சாதிக்க நீ எண்ணியதில், அக்கா அகில இந்திய வானொலியில் வீணை வாசிக்கும் அளவுக்குத் தேர்ச்சி பெற்றவளானாள். மூத்த பரத நாட்டிய ஆசிரியர் கே.ஜெ. சரஸாவிடம் என்னை பரதம் பயில வைத்தாய். அரங்கேற்றம் ஆகி பல மேடைகளில், வெளிநாடு உட்பட ஆடச் செய்தாய். அதுவும், எனது 57வது வயதில், ‘சரஸாலயா’வின் பொன்விழாவைக் கொண்டாடிய தருணத்தில், பல ஆண்டுகள் கழித்து மேடையேறி ஒரு மணிநேரம் என்னால் ஆட முடிந்ததென்றால், அதற்கு சரஸா டீச்சர் போட்ட அழுத்தமான அஸ்திவாரமும், அம்மா.. நீ கொடுத்த ஊக்கமும்தான் காரணங்களாகும்.

சுமார் 47 ஆண்டுகளுக்கு முன் சின்னண்ணா லட்சுமணன் ஓர் அமெரிக்கப் பெண்ணை மணக்க விருப்பம் தெரிவித்த போது, அரை நாள் மௌனம் காத்துவிட்டு, அப்பாவிடம், ‘சம்மதம் தெரிவித்து விடுங்கள்’ என்றாய். அமைதியாய். “எப்படி அம்மா, அத்தனை சீக்கிரம் ஒரு முடிவுக்கு வந்தாய்?” என்று நான் கேட்ட போது, “சரி என்று சொன்னதால், மகனோடு மருமகளும் கிடைத்தாள். மறுத்திருந்தால், மகனை இழந்திருப்பேனே!” என்றாய் சன்னக் குரலில். எத்தனை விவேகமான கணிப்பு!

“இறைவன் நமக்கு நாக்கைக் கொடுத்திருப்பது ருசித்து உண்ண மட்டும் அல்ல. இனிமையான, இதமான வார்த்தைகளைப் பேசுவதற்காகவும்தான். மறக்கக்கூடாது” என்பது நீ சின்ன வயதில் எனக்கு எப்போதும் சொன்ன புத்திமதி.

சின்ன வயதில் வீட்டுக்குழந்தைகள் அத்தனை பேரும் சாயங்காலம் ஆனால் உன்னைச் சுற்றி உட்கார்ந்து விடுவோம். கற்சட்டி நிறைய வத்தல் குழம்பு, தயிர் சாதங்களைப் பிசைந்து வைத்துக்கொண்டு, நீ தினமும் ஒரு புதுக் கதையைச் சொல்லிக் கொண்டே நாங்கள் நீட்டும் கையில் சாதத்தை உருட்டிப் போடுவாய். சட்டிசாதம் உள்ளே போவது கூடத் தெரியாது. கதை அத்தனை சுவாரஸ்யமாக இருக்கும். எலிப்பெண் கதையைச் சொல்லும் போது உதடுகளைக்குவித்து எலி கத்துகிற மாதிரி ‘ப்ச்..ப்ச்..’ என்று ஓசைப்படுத்திக் கொண்டே கதையை விவரிப்பாய். உன்னுடைய சாமார்த்தியமான வர்ணனையில் ராஜகுமாரியின் அழகும், காடுகளின் அடர்த்தியும், புலியின் கொடூரமும் கண் முன் தத்ரூபமாய் நிற்கும். கதைக் கதாபாத்திரங்கள் அழுதால் நாங்களும் அழுது, சிரித்தால் சிரித்து, அவர்களுக்குக் கடவுள் வரம் கொடுத்தால் எங்களுக்கே தந்த மாதிரி கையைத் தட்டி பரவசப்பட்ட அற்புதமான நாட்கள் அவை!

உனக்கு அந்தக் காலத்தில் எழுத வாய்ப்பு கிட்டவில்லை. ஆனால், உன்னிடமிருந்து பெற்ற ஜீவ அணுக்கள் மூலம் அந்தக் கற்பனா சக்தி எனக்கு வந்திருப்பதோடு வாய்ப்புகளும் கிடைத்ததில், இன்று நான் எழுத்தாளராக இருக்கிறேன். ஆக, இந்த திறமை எனக்கு நீ தந்த வரம். ஆசீர்வாதம். இதற்காக உன்னையும், இப்படியொரு அம்மாவைத் தந்ததற்காக கடவுளையும் கைகூப்பி மனம் நெகிழ்ந்து நமஸ்கரிக்கிறேன்.

– எழுத்தாளர் சிவசங்கரி

தினமணி – 20.12.2017

# 9. POOR MOTHER...PROUD CHILDREN

Sumitra Devi cleaned the streets of Central coalfield limited township of Rajrappa, Jharkhand, for 30 years and none living the colony could have ever thought that her retirement would be so special that people would bow before her in respect on the last day of her service.

On her retirement, her colleagues and neighbours made some arrangements to bid her adieu. There was nothing special and it was quite like another fourth grade employee retiring, until the arrival of three cars that change the scene altogether.

The first car with blue beacon caught everybody's attention. It was the District Collector of Siwan, Bihar touched his mother Sumitra Devi's feet. Soon, the gentlemen who got down from other two cars followed the District Collector. Smitra's elder son Virendra Kumar is a Railway Engineer her second son Dhirendra Kumar is a Doctor and her third son Mahendra Kumar is now the District Collector of Siwan District in Bihar.

When all the three sons touched her feet, Sumitra started crying. The tears of happiness were enough to tell that she was quite happy while her superiors who had gathered there to felicitate her on her last day felt amazed.

'Sahab, for 30 years, I cleaned the streets of this colony, but my children are Sahabs like you' said the emotional Sumitra while introducing her sons to her superiors.

While Sumitra's colleagues felt proud of her and their association for such a strong woman working with them, her three sons also shared some secrets and how their mother made them successful in life.

"Our mother has sacrificed a lot for us. She never let us down and always encouraged us to study and study harder, so that one day we can be officers in any of the offices like this one. I am proud that she is my **mother**" Siwan's Collector, Mahendra Kumar said.

Sumitra's sons also shared the secrets of their success and how their mother worked hard to give them a good education. They said that all three of them decided to do something good in their lives after seeing the mother's struggle.

Despite Sumitra Devi's sons becoming big officers in their respective fields, she didn't stop cleaning the streets of colony and left her job. Instead, she kept doing her work with utmost dedication and hard work.

"I didn't leave this job despite my sons being successful because it was this job which helped me to educate my children. How could I have something which turned my dreams into reality" **said Sumitra.**

**Hard work pays**

Mahendra Kumar, District Collector of Siwan got very emotional while seeing her mother saying goodbye to her job which made him and his brothers officers as many people there was unaware of this fact.

The District Collector gave an emotional message that was appreciated by all the people present there.

"No job is difficult in life. Everything becomes possible with honest hard work. My mother and us have seen tough times in our lives, yet she never let us feel broken or disheartened. I am proud that we all lived up to her hard-work and expectations" said the District Collector.

* * *

எத்தனை (வயதாகினும்)
வருடங்களாயினும் பசியென்ற
கூக்குரல் கேட்டதும் ! தன் பசியை
பெரிதாய் பார்க்காமல் நம் பசியை
போக்க ஓடி வருபவள்தான்
'அம்மா'

* * *

Being a Full-Time MOTHER
is one
of the highest salaried jobs...
Since the payment is
PURE LOVE.

* * *

குழந்தைகளின் பல்வேறு
அழுகைகளின் அர்த்தம்
புரிந்த ஒரே அகராதிப் புத்தகம்
**அம்மா....** மட்டுமே

* * *

## 10. APPA - I LOVE U...

Daily my childhood used to start by your wake-up call, and I would see you being busy helping amma in the kitchen. Be it slicing the coconut and dicing the vegetables for that days' menu, you were there always. I just loved the way you helped her in the kitchen, listening to her stories and sharing your thoughts. When I was little, you would get me ready for school put my school uniform, belt, tie, socks and send me to school. As a naughty toddler and the first child, I received a lot of scolding and a few spanks from you. I would be angry on you when you don't let us watch TV and play video games. So silly of me. Now, those memories bring a big smile on my face.

Me, being a fussy eater there are times mom gave up and scolded me, it was YOU who would come and feed me till I finished my plate and later explained me how I may become weak and tired, if would not learn to eat on my own. Which I really found sensible rather than amma telling "What will you do after marriage?" kind of advises(LOL). I would never forget your continuous bedtime stories, answering every irrelevant question of mine, by gently patting on my forehead till midnight. The amount of patience and responsibility shown by you was amazing. Those days were tough for you because of your financial condition, but you and amma never used to show it on your children. When I was a teenager, you would never miss to pick me from my tuition classes, amidst the several flat tyre episodes of our scooter.

I remember, the day when the scooter broke down as usual and you sent me in an auto, but you soon followed the auto, till my college as you realized later that the driver was drunk and was so scared and concerned about me. I am blessed to have such a caring and a doting dad. You taught me to drive my moped. You were so happy when your daughters got their driver's license.

You were ecstatic at my marriage. As most of the fathers you made sure all arrangements were well in place with respect to hospitality. I know you guys were missing me a lot, stopping your tears when sending me off to my in-laws. You were overjoyed when my baby was born. You would wait outside the room till the baby is fed and then ask us to sleep and took the responsibility of putting the baby to sleep, be it mid noon or midnight. You were there with me in all those sleepless nights when he was ill or cranky.

You have shown us the value of a person's "presence" than their "presents". Today, I value and respect a person for his nature and his values more than his financial assets or status is because of this reason. If I am empowered to lead my life on my own today, it is because of you and amma. It is your number which is first on my phone and on emergency contacts list even today, because I know wherever you are, you would be available for your daughter.

I just want to say - Appa, I love you, Pa.

* * *

# 11. அப்பா நமக்காக எது செய்தாலும், சொன்னாலும் ஒரு சிறந்த எதிர்காலம் இருக்கும்

ஃபேனை ஆஃப் பண்ணாமல் வெளியே போறியே, ஆளில்லாத ரூமில் டி.வி ஓடுகிறது பார், அதை அணை, பேனாவை ஸ்டாண்டில் வை கீழே கிடக்குது பார். இப்படியே சின்னச்சின்ன விஷயத்திற்கு அப்பா அவனை நச்சரித்துக் கொண்டிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

நேற்றுவரை வீட்டில் இருந்ததால் அதையெல்லாம் தாங்கிக் கொள்ள வேண்டி இருந்தது. இன்று அவனுக்கு வேலைக்கான நேர்காணலுக்கு அழைப்பு வந்திருந்தது. வேலை கிடைத்ததும் எங்கேயாவது வெளியூர் சென்றுவிட வேண்டும். அப்பாவின் நச்சரிப்பு குறையும் என்று எண்ணிக் கொண்டான்.

நேர்காணலுக்கு கிளம்பினான். 'கேட்கிற கேள்விகளுக்கு தயங்காமல் தைரியமாக பதில் சொல்' என்று கூறி வழியனுப்பி வைத்தார் அப்பா. நேர்காணலுக்கு அழைக்கப்பட்டிருந்த முகவரிக்கு வந்து சேர்ந்தான் மகன்.

கட்டிடத்தின் பெரிய கேட்டில் செக்யூரிட்டி இல்லை. கதவு சற்றே திறந்திருந்தாலும் அதன் தாழ்ப்பாள் மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு உள்ளே நுழைபவர் மேல் இடித்துவிடுவது போல் இருந்தது. அதனை சரி செய்து கதவை சரியாக சாத்திவிட்டு உள்ளே நுழைந்தான்.

நடைபாதையின் இருபுறமும் அழகு மலர்ச்செடிகள் வரவேற்றன. தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த காவலாளி மோட்டாரை அணைப்பதற்காக குழாயை அப்படியே போட்டுவிட்டுப் போயிருந்தான். தண்ணீர் செடிகளுக்குப் பாயாமல் நடைபாதையை நனைத்துக்கொண்டு இருந்தது. குழாயை கையில் எடுத்தவன் செடியின் அடியில் நீர்படும்படி போட்டுவிட்டு கடந்து சென்றான்.

வரவேற்பறையில் யாரும் இல்லை. நேர்காணல் முதல் தளத்தில் நடைபெறுவதாக அறிவிப்பு வைத்திருந்தார்கள். மெதுவாக மாடிப்படியில் ஏறினான். இரவில் போடப்பட்ட விளக்கு காலை பத்து மணியாகியும் ஒளிர்ந்து கொண்டிருந்தது. 'விளக்கை அணைக்காமல் செல்கிறாயே...' என்ற அப்பாவின் கண்டிப்பு காதுக்குள் ஒலிப்பது போல் தெரிய, எரிச்சல் வந்தாலும் படியின் அருகே இருந்த சுவிட்சை இயக்கி விளக்கை அணைத்தான்.

மாடியில் பெரிய ஹாலில் ஏராளமானவர்கள் இருக்கையில் அமர்ந்து இருந்தார்கள். கூட்டத்தைப் பார்த்த மகனுக்கு ஒரே திகைப்பு. "நமக்கு வேலை கிடைக்குமா?" என்று மனசாட்சி படபடக்க ஆரம்பித்தது. பதற்றத்துடன் அறைக்குள் நுழைய காலடி வைத்தவன், மிதியடியில் 'வெல்கம்' எழுத்து தலைகீழாக இருப்பதை கவனித்தான். வருத்தத்துடனேயே அதை காலால் சரி செய்து விட்டு உள்ளே நுழைந்தான். அறையின் முன்புறத்தில் நேர்காணலுக்கு வந்த இளைஞர்கள் அமர்ந்திருக்க, பின்பக்கத்தில் பல மின்விசிறிகள் சுற்றிக் கொண்டிருந்தன.

"யாருமே இல்லாமல் ஏன் அறையில் விசிறி ஓடுகிறது?" என்ற அப்பாவின் கேள்வி காதிற்குள் ஒலிக்க, மின்விசிறிகளையும் அணைத்து விட்டு, மற்ற இளைஞர்களுடன் சென்று அமர்ந்தான்.

இளைஞர்கள் ஒவ்வொருவராக உள்ளே அழைத்து மற்றொரு வழியாக வெளியே அனுப்பப்பட்டுவிட்டனர். கலக்கத்துடனேயே நேர்காணல் அதிகாரி முன்பு போய் நின்றான். சர்டிபிகேட்டுகளை வாங்கிப் பார்த்த அதிகாரி, "நீங்கள் எப்போது வேலைக்கு சேருகிறீர்கள்?" என்று கேட்டார்.

"இது நேர்காணலில் கேட்கப்படும் புத்திக் கூர்மை கேள்வியா..இல்லை வேலை கிடைத்து விட்டதற்கான அறிகுறியா" என்று தெரியாமல் குழம்பி நின்றான் மகன். 'என்ன யோசிக்கிறீர்கள்?' என்று பாஸ் கேட்டார். நாங்கள் யாருக்குமே இங்கே கேள்வி கேட்கவில்லை. கேள்வி பதிலில் ஒருவரின் மேலாண்மையை தெரிந்து கொள்வது கடினம். அதனால் செயல்பாட்டின் அடிப்படையில் தேர்வு வைத்துவிட்டு கேமரா மூலம் கண்காணித்தோம். இங்கு வந்த எந்த இளைஞனுமே தேவையில்லாமல் வீணாகிய நீர், எரிந்த மின்விளக்கு, ஓடிய விசிறி எதையுமே சரி செய்யவில்லை. நீங்கள்தான் அத்தனையையும் சரி செய்துவிட்டு வந்தீர்கள். நாங்கள் உங்களையே தேர்வு செய்திருக்கிறோம் என்றார்.

அப்பாவின் கண்டிப்புகள் எப்போதும் அவனுக்கு எரிச்சலையே தரும். அந்த ஒழுங்கு முறையே இன்று வேலை வாங்கித் தந்திருக்கிறது என்பதை அறிந்த போது நெகிழ்ச்சியாக இருந்தது.

அப்பாவின் மீதுள்ள எரிச்சல் தணிந்தது. வேலைக்கு செல்லும் இடத்திற்கு அப்பாவையும் அழைத்துச் செல்லும் முடிவுடன் சந்தோஷமாக வீடு திரும்பினான் மகன்

* * *

எப்படி எப்படியல்லாமோ
தன் பாசம் உணர்த்துவாள் அம்மா...
ஒரே ஒரு கை அழுத்தத்தில் எல்லாமே
உணர்த்துவார் அப்பா!

* * *

அம்மா எத்தனையோ முறை
திட்டினாலும் உறைத்ததில்லை
உடனே உறைத்திருக்கிறது
அப்பா முகம் வாடும் போது.

* * *

உன் அப்பா எவ்வளவு
உற்சாகமாக இருக்கிறார் தெரியுமா
என என் நண்பர்கள் என்னிடமே
சொல்லும்போதுதான் எனக்குத்
தெரிந்தது...
எத்தனை பேருக்குக் கிடைக்காத
தந்தை எனக்கும் மட்டும் என...

* * *

அம்மா செல்லமா, அப்பா செல்லமா
என கேட்டபோதெல்லாம்
பெருமையாகச் சொல்லி இருக்கிறேன்
அம்மா செல்லமான
அப்பா செல்லம் என.

* * *

# 12. சுதந்திரமாக இருக்க விரும்பிய மகள் !

தன் மகளை சில விஷயங்களுக்காக அடிக்கடி கடிந்து கொள்வதால், மகள் அவள் அப்பாவிடம் கேட்டாள். "ஏம்பா.. என்னை இப்படி கண்டிப்புடன் நடத்துகிறீர்கள்? என்னை கொஞ்சம் சுதந்திரமாக விடலாமே.. " என்று.

ஆனால், அதை அப்பா சற்று கஷ்டமாகவே உணர்ந்தார். இதை எப்படி இவளுக்கு சொல்லிக் கொடுப்பது என யோசித்தார்.

ஒரு நாள் மகள் வந்து கேட்டாள். "அப்பா! நான் பட்டம் விட்டு விளையாடப் போகிறேன், நீங்களும் வாங்க.." என்று அழைத்துக் கொண்டு வீட்டின் மொட்டை மாடிக்கு சென்றாள்.

பட்டத்தை நூலில் கட்டி பறக்க விட்டு மகிழ்ந்தாள். அப்படி மகிழ்ந்திருக்கும் வேளையில் அப்பா கேட்டார். "பட்டம் மேலே பறப்பதை பார்க்க அழகாய் இருக்கிறது. ஆனால், அதனால் அதன் விருப்பம் போல் பறக்க முடியவில்லை. அதற்கு தடையாய் இருப்பது என்னம்மா?"

மகள் பட்டென பதில் சொன்னாள். "இந்த நூல்தான் அப்பா. அதை தன் இஷ்டத்திற்கு விடாமல் கட்டி வைத்திருக்கிறது."

"அப்படியா... எனக் கேட்டுவிட்டு அந்த நூலை அப்படியே அறுத்து விட்டார் அப்பா. பட்டமும் தன் இஷ்டப்படி பறந்தது. ஆனால், சற்று நேரத்திலேயே கிழிந்த காகிதமாய் கீழே விழுந்தது.

அப்பா சொன்னார் – "மகளே! இந்த பட்டத்தை தன் இஷ்டப்படி பறக்க விடாமல் தடுக்கவில்லை. சரியான வழியில் இந்த பட்டம் பறந்து உயரங்களை கீழடக்க இந்த நூல் உதவியாய் இருக்கிறது. இதே போலத்தான் மகளே, உன் அப்பாவாகிய நானும் ஒரு நூல்தான். நீதான் அந்தப் பட்டம். நீ என்னுடைய பேச்சைக் கேட்டு அதன்படி நடப்பாயெனில் என் பாதுகாவலுடன் சுதந்திரமாக உயர பறக்கலாம். உன் இஷ்டப்படி மட்டுமே வாழ நினைத்தால் அந்த பட்டம் கிழிந்து காகிதம் ஆனது போல் உன் வாழ்க்கையும் ஆகி விடலாம். இப்போது புரிந்திருப்பாய் ஏன் உன்னை கண்டிக்கின்றேன் என்பதனை, நூலாகிய என்னை அறுத்து விடாதே'' என்று சொல்லும்போதே மகள் தன் அப்பாவை கட்டி அணைத்துக் கொண்டாள்.

ஆம்..அன்பான பிள்ளைகளே...உங்களுக்கு இனிமையாய் தோன்றுகின்ற வழிகள் ஏராளம் இருக்கலாம். ஆனால், அவற்றின் முடிவு பயங்கரமானதாக இருக்கக்கூடும்.

அம்மாவின் அன்பும், அப்பாவின் கண்டிப்பும் இருந்தால்தான் குழந்தைகளின் வாழ்வு சரியான வழியில் இனிமையாக அமையும். என்றும் மறக்காதீர்கள்.

* * *

# 13. தந்தையும்... மகளும்...

**மகள் :** தான் புதியதாக வாங்கிய ஸ்மார்ட் போனை தனது தந்தையிடம் காட்ட வருகிறாள்.

**தந்தை :** இந்த போன் எவ்ளோமா ?

**மகள் :** 40,000 ரூபாய் அப்பா.

**தந்தை :** இந்த கவர் மற்றும் ஸ்கராட்ச் கார்டுக்கு என்ன விலை?

**மகள் :** 4 ஆயிரம்தான் அப்பா.

**தந்தை :** என்னது நாலாயிரமா?

**மகள் :** ஆமாம்பா! ரூ. 40 ஆயிரத்துக்கு போன் வாங்கியிருக்கோம். அது பாதுகாப்பாக இருக்க ரூ. 4 ஆயிரம் செலவு பண்றதுல என்ன இருக்கு? இதெல்லாம் ஒரு பிரச்சனையா?

**தந்தை:** ஏம்மா... ரூ. 40 ஆயிரத்துக்கு போன் வாங்கியிருக்க. அது பத்திரமா இருக்க அதை தயாரிச்சவங்க எந்த பாதுகாப்பும் செய்யாமலேயா வித்தாங்க?

**மகள் :** என்னப்பா? அவங்க போன் தயாரித்து தான் கொடுப்பாங்க. அதை நாமதான் பத்திரமா வச்சிக்கணும். அது மட்டும் இல்லை, பாருங்க! இந்த கவர் போட்டதும் போன் இன்னும் எவ்ளோ அழகா இருக்கு? இந்த ஸ்கராட்ச் கார்டு போன்ல கீரல் விழாம பாதுகாக்கும்.

**தந்தை :** அப்படியா? ஏம்மா நீ இந்த போனை விட எவ்வளவு அழகா இருக்க? இந்த போனை பாதுகாக்கிறியே.. உன்னை ஏம்மா பாதுகாக்க மாட்ற? நான் உன் உடலை மறைக்க ஆடை அணிய சொல்லிக்கிட்டே இருக்கேன். நீ காது கொடுத்து கேக்கவே மாட்ற.

இந்த போனை விட நீ மதிப்பு இல்லாதவளா? இது உனக்கு தெரியவில்லையா? நீ முழுமையாக ஆடை அணிந்தால் இன்னும் எவ்வளவு அழகா இருப்ப? அது தீய பார்வைகள் உன்னை தீண்டாமல் பாதுகாக்கும் இல்லையா? யாரோ ஒருவர் தயாரிப்புக்கே நீ இவ்வளவு பாதுகாப்பு தர நினைக்கும்போது, இறைவன் படைத்த என் மகளான உன்னை நான் பாதுகாக்க வேண்டாமா? இந்த ஸ்மார்ட் போனை விட நீதான் பொக்கிஷம்.

**மகளுக்குப் புரிந்தது தன் தவறு.**

* * *

# 14. எத்தனை வலிகள்

மனதை உலுக்கிய உண்மைச் சம்பவம்.

நான் எப்போதுமே சாதாரண மக்களுடன் இயல்பாக பழகும் குணம் உடையவன்.

தினமும் அலுவலகம் செல்லும் வழியில், ஒரு பெரியவர் வெய்யிலிலும், மழையிலும் பொம்மைகள் விற்றுக் கொண்டு இருப்பதைப் பார்த்து இருக்கிறேன்.

குழந்தைக்கு ஒரு பொம்மை வாங்கலாம் என்று, அவரிடம் ‘ஒரு வெள்ளை நிற பூனை பொம்மை குடுங்கய்யா’ என்றேன்.

அவர் 80 ரூபாய் என்றார். பணக்கார கடைகளில் பேரம் பேசாமல், ஏழைகளிடம் தானே நாம் பேரம் பேசுவோம். அதுதானே சராசரி மனிதர்களின் இயல்பு.

அதனால் நான் என்னங்கைய்யா ஒரு பூனை பொம்மை 80 ரூபாயா? 70 ரூபாய்க்கு குடுங்க என்றேன். அவர் என் கண்களை உற்றுப் பார்த்து ‘இதை குழந்தைகளுக்கா வாங்கறீங்க?’ என்று கேட்டார்.

நான் ‘ஆமாம்’ என்றேன். அவர் கொஞ்சம் மெதுவான குரலில் ‘சரி குடுங்க’ என்றார்.

அவர் கண்கள் லேசாக கலங்கியதை நான் கவனித்தேன். அது மனதை என்னவோ செய்ய ‘ஏன் அய்யா என்னாச்சு? ஏன் அழறிங்க?’ன்னு கேட்டேன்.

‘ஒன்னுமில்லை சார்’ என்றார். நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி கேட்கவும், அவர் மெதுவாக சொல்ல ஆரம்பித்தார்.

நான், ஆவுடையப்பன் (77வயது), மனைவி பார்வதி (73 வயது) எங்களுக்கு 6 குழந்தைகள். மிகவும் ஏழ்மையான குடும்பம். கஷ்டமான நிலையில் பிள்ளைகளை வளர்த்தேன். பல நாட்கள் நானும் மனைவியும் சாப்பிடுவது இல்லை. இருப்பதை பிள்ளைகளுக்கு கொடுத்து விடுவோம். பல நாள் இரவு பட்டினி இருந்திருக்கிறோம். ஒரு நாள் கூட மனைவி இதற்காக என்னோடு சண்டை போட்டதில்லை.

பிள்ளைகள் எல்லாம் திருமணம் முடித்து சென்று விட்டனர். தடுமாறும் வயது எங்களுக்கு. ஆதலால், பெற்ற மக்களின் வீட்டில் போய் இருக்கலாம் என்ற எண்ணத்தில் மூத்த மகனிடம் சொன்னேன். அதற்கு அவன், இருவரையும் கூட்டிக்கொண்டு போய் வைத்து பராமரிக்க முடியாது. யாராவது ஒருவர் வரலாம் என்றான். அப்படி நான் மூத்த மகன் வீட்டிற்கும், மனைவி வேறொரு மகன் வீட்டிற்கும் சென்றோம். 50 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த மனைவியை பிரிந்து தனிமையில், பல நாட்கள் அழுதிருக்கிறேன்.

மனைவியின் நினைவுகள் எப்போதும், இரண்டு வார்த்தை கூட பேச முடியாமல் அழுதிருக்கிறேன். இறுதியில் என் மனைவி இருக்கும் ஊருக்குச் சென்றேன். என் மனைவியிடம் சொன்னேன். “நாம் வேறு எங்காவது போய் விடலாமா?” என்றேன். மனைவியும் அழுது கொண்டே சம்மதித்தாள்.

நாங்கள் பெற்று வளர்த்து ஆளாக்கிய பிள்ளைகளை விட்டு வெளியே வந்து ஒரு வருடமாகிறது.

நான் குழந்தைகள் விளையாடும் பொம்மைகளை நடந்தே விற்கிறேன். தினமும் 80 ரூபாய் முதல் 100 ரூபாய் கிடைக்கும். எப்போது வேண்டுமானாலும் நான் இறந்து போகலாம். ஏன்? நான் நடந்து கொண்டிருக்கும் போதே கூட மரணம் வரலாம். அதனால், அந்த 100 ரூபாயில் கொஞ்சம் மிச்சம் பிடித்து சேமிக்கிறேன். அது எங்கள் மரண செலவிற்கு. என் பிள்ளைகளுக்கு அந்த செலவு கூட வேண்டாம் என்று அதை மனைவியிடம் கொடுத்து வைத்திருக்கிறேன்.

ஒரு நாள் 'இந்த பணம் எதற்கு சேமிக்கிறீர்கள்?' என்று என் மனைவி கேட்டாள். 'நம் மரண செலவிற்கு' என்றேன். சத்தமாக கத்தி அழுது விட்டாள். இப்போது என் மனைவியின் பிரார்த்தனை 'நான் மரணிக்கும் அதே நேரத்தில், எனக்கும் மரணத்தை கொடு சாமி' என்று அடிக்கடி சொல்கிறாள். என் பிரார்த்தனையும் அதுவேதான் என்று அவர் சொல்லவும், இதைக் கேடடுக் கொண்டு இருந்த நான் மனதால் நொறுங்கிப் போனேன். நீங்கள் இங்கே இருப்பது உங்கள் பிள்ளைகளுக்கு தெரியுமா? என்றேன். அவர் 'தெரியாது' என்றார்.

எனக்கு மனம் கனத்துப் போனது.

❋ ❋ ❋

## MY HEART

One day an 11 year old girl asked her daddy, "What are you going to get me for my 15th birthday?" The father replied, "There is much time left".

When the girl was 14 she fainted and was rushed to the hospital. The doctor came out and told her dad she had a bad heart & she is probably counting her days.

When she was lying in the hospital bed she said "Daddy, have they told you i am going to die?"

The father replied no you will live as he left weeping.

She said, "How can you be sure" He turned around from the door and said "I know"

She turns 15 when she is recovering and comes home to find a letter on her bed. It says : "My Dearest Daughter, if you are reading this it means all went well as I told you.

One day you asked me what I was giving you for your 15th birthday. I didn't know then but now my present to you is MY HEART.

*Her father donated his heart.*

*Moral :*

Love your parents..they sacrifice a lot to make us happy, without letting children realize... Many times we are so busy growing up that we forget that they are also growing old.. Spend Quality time with them, treat your parents with loving care, for your will know their value, when you see their empty chair..

❋ ❋ ❋

## 15. மறுபடி உன் மகளாகப் பிறக்க வரம் மட்டும் போதுமப்பா!

நான் முதன்முதலாக நேசித்தவன் நீ.
எப்பொழுது நேசிக்கத்தொடங்கினேன் என்ற
கேள்வியை மட்டும் கேட்காதே அப்பா.

அம்மாவின் அடி வயிற்றில்
கை வைத்து என்னுடன் பேசினாயே!
அப்பொழுதே நிகழ்ந்திருக்கக்கூடும்..
இல்லையேல்..கொடி கூட
அவிழாத நிலையில் உன்
கையில் ஏந்தி உச்சி
நுகர்ந்து முத்தம் பதித்தாயே!!
அப்பொழுதே நிகழ்ந்திருக்கக்கூடும்

ஆயிரமாயிரம் கதைகளை சொல்லி
அன்னை உறங்க வைத்த போதிலும்
உன் மார்பில் தூங்கிய சுகம் வருமா?

கண் எரியாமல் நீராட
செய்வதும் ஒரு கலையாகும்.
அதில் தாயை விட நீ
தேர்வு பெற்றதாலோ என்னவோ...?
உன்னை மட்டும் தேடி அழுதேன்
குளிக்கும் வேளையில்.

நடைபழகும் வேளையை
விடுத்து என் பாதங்கள்
தரையில் ஊன்றியதாய் நினைவில்லை..
உன் தோள் மீது
அமர்ந்து என் கொலுசோடு
உரசிய உன் சட்டைப்
பொத்தான்கள் மட்டுமே ஞாபகம்.

சின்ன சின்ன மணிகளை
வைத்துத் தைத்த பாவாடை
சட்டை அணிந்த பொழுது
தேவதையே எனக்கு மகளாகப்
பிறந்து விட்டாள்! என்று கொண்டாடினாயே.

மிரட்டலாக என்னை வகுப்பறையில்
அமர்த்தி விட்டு கலக்கத்துடன்
வெளியேறும் உன்னை நானறியாமல்
யார் அறிவார்?

தாவணியின் நுனியினை பிசைந்த
வண்ணம் உன் முன் நாணி நான்
நிற்க... உன்னை விட்டு
விலகிச் செல்ல வெகு நாட்கள்
இல்லை என்று நினைத்தாய் போலும்!
கண்களில் துளிர்த்த நீரை யாவருக்கும்
தெரியாமல் துடைத்துக் கொண்டாய்...

நான் சமைத்த உணவை நா கூசாமல்
புகழ்ந்து தள்ளுவாயே! உன் பொய்க்கும்
ஒரு காதல் உண்டு அப்பா.

என் விழி அசைவினில் என்
தேவைகளை பூர்த்தி செய்யும் உன்னை
தெய்வத்திற்கு ஈடாக பார்க்க முடியுமா
என்று கேட்டால் இல்லை என்று தான்
சொல்வேன்...

என் ஒரே ஒரு கவலை என்னை
புகுந்த வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டு
கண்ணீர் விடும் உன்னைத் தேற்ற
என்னை அன்றி எவருக்குத் தெரியும்
என்பதே?

என் கணவனை எந்நாளும்
உன்னுடன் ஒப்பிட மாட்டேன்.
எனக்கு நன்றாகவே தெரியும்
என்னை முழுதாக நேசிக்கும்
ஒரே ஒரு ஆடவன் நீ மட்டும்தான் என்று..
இனி ஒரு ஜென்மம் வேண்டும் என்று
எண்ணியதில்லை.. ஆனால் அவ்வாறு
நிகழ்ந்தால் மறுபடி உன் மகளாக பிறக்கும்
வரம் மட்டும் போதுமப்பா...

* * *

# 16. மகளைப் பெற்ற அப்பாக்களுக்கு சமர்ப்பணம்..

பிறந்ததும்
ஒரு வெள்ளைத் துணியில்
ஏந்திக் கொடுத்தார்கள்
என் இளஞ்சிவப்புத் தேவதையை...
அதன் மூடிய இமைகளுக்குள்
இரு விழிகள்
அசைவது போலத்தான் இருந்தது
அதுவரையில் என் இதயம்..!

✻ ✻ ✻

மகள் கோலம் வரைகையில்
அது முடியும் மட்டும்
நம்பிக்கையோடு
காத்திருக்கின்றன
சில தெய்வங்கள்
கோலத்திலேயே வாழ்ந்து விட..!

✻ ✻ ✻

அள்ளிக்  கொடுத்தாலும்
ஆறாத மனம்
மகள் கிள்ளிக் கொடுத்ததில்
அடங்கிவிடுகிறது.

✻ ✻ ✻

மகள் சாதம் பரிமாறியபோது
தட்டில் கொஞ்சம் சோறும்
நிரம்பி வழியும் சந்தோஷமும் இருந்தது

✻ ✻ ✻

ஒவ்வொரு இரவும்
தூங்கும் மகளின் முகம்
பார்த்துக் கொண்டிருப்பேன்
அது தவிர தியானம் என்று
தனியாக எதுவும் செய்வதில்லை நான்!
எனக்குப் பொட்டு
வைத்துவிட்டுப் போனாள்
பின், அதற்கு நேராக
என் புருவங்களை நகர்த்திக் கொண்டேன்.

மகள் பிறந்ததும்
முதலில்,
சுண்டு விரல்தான்
பிடித்துப் பார்த்தேன்
அதன் நினைவாய்
எங்கும், என்
சுண்டுவிரல் பிடித்தே வருகிறாள்.

✻ ✻ ✻

மகளின்
பாதங்களால்
நிறைகிறது
என் வீடு !

✻ ✻ ✻

மகள் முத்தமிட்ட எச்சில்
ஈரநினைவாகி விடுகிறது.

✻ ✻ ✻

குவளை நீர் மொத்தமும்
சிந்திவிட்டாலும்
மகள் கொண்டு வந்ததில்
என் தாகம் தீர்ந்தது.

✻ ✻ ✻

நெஞ்சில் தான் படுத்திருப்பாள்
அவள் இல்லா நேரத்தில்
பதிலுக்கு தலையணை
கொடுத்துட்டுப் போனாள்...
மூச்சுத் திணறியது.

✻ ✻ ✻

நான் அழும்போது
மகள் தன் பிஞ்சுக் கைகளால்
என் கண்ணீர் குளத்தின்
மொத்தத் தண்ணீரையும்
வாரி இறைத்து
வற்ற விடுகிறாள்.

❋ ❋ ❋

கோபித்துக் கொள்ளும் மகளிடம்
மண்டியிட்டு மன்னிப்புக்கேட்பேன்
தெய்வங்கள் போலில்லை
உடனே மன்னித்து விடுகிறாள் மகள் !

❋ ❋ ❋

மகள் கோபத்தில் இருக்கும்போது
மிக அருகில் அமர்ந்து விடுவேன்
சமாதானத்திற்கு தலை நிமிரும்போது
ஆளில்லை என்றால்
பாவம் வாடி விடும்.

❋ ❋ ❋

நட்சத்திரங்களை எண்ணிக்
கொண்டிருந்த மகள்
நடுவிலேயே தூங்கி விட்டாள்
நான் எவ்வளவு சொல்லியும்
இரவு முழுவதும் காத்திருந்தன
நட்சத்திரங்கள்
அவள் எப்படியும் எழுந்து விடுவாள் என

❋ ❋ ❋

பூந்தொட்டித் தண்ணீரில்
நிலா தவறி விழுந்து விட்டதென
காப்பாற்றச் சொல்லி நிற்கிறாள் மகள்
இப்போது அவளுள் தவறி விழுந்த என்னை
அந்த நிலாதான் காப்பாற்றியாக வேண்டும்.

❋ ❋ ❋

ஒரு தந்தையும் மகளும் ஆற்றின் பாலத்தை கடக்க முயல்கின்றனர்.

தந்தை சொன்னார் : “என் கையை கெட்டியாகப் பிடித்துக் கொள் மா. ஆற்றில் தண்ணீர் நிறையப் போகிறது. பத்திரம் மா.” என்று.

உடனே மகள் சொன்னாள். “அப்படியென்றால் நீங்க என் கையை பிடித்துக் கொள்ளுங்கள் அப்பா.”

இரண்டுக்கும் என்னம்மா வித்தியாசம் என்றார் தந்தை

“நான் உங்கள் கையை பிடித்தால், ஏதேனும் தவறு நடந்தால் கையை விட்டுப் பிரிய வாய்ப்பிருக்கிறது. ஆனால், நீங்கள் பிடித்தால் எந்த காரணத்திற்காகவும் என் கையை விட மாட்டீர்கள் அப்பா.” என்றாள் மகள்

உண்மையான அன்பு எங்கே உள்ளதோ, அளவு கடந்த நம்பிக்கையும் அங்கே...

❋ ❋ ❋

அம்மாவின் அன்பு தோசை மாதிரி
அப்பாவின் அன்பு தோசைக்கல் மாதிரி
தோசையின் ருசி தெரியும்...
தோசைக்கல்லின் தியாகம் தெரியாது..!

❋ ❋ ❋

# 17. பெண் குழந்தைகளுக்கு ஏன் அப்பாக்களைப் பிடிக்கிறது?

அப்பா – மகள் உறவு அவ்வளவு அழகு. மகிழ்வின் மகிழ்வில் தன்னையே உணரும் அப்பாக்களுக்கு மட்டும்தான் தெரியும் அந்த உறவின் அற்புதம், குறிப்பிட்ட வயதை எட்டிய பின் ஆண் பால், பெண் பால் நெட்டித்தள்ள அப்பா மகளுக்குள் விரியும் சிறிய இடைவெளி எப்படி விழுந்து எப்படி வளர்கிறது. இதுவரை அவிழ்த்து அறிய முடியாத புதிர் அது. ஆனாலும், எந்தக் காலத்திலும் எந்தக் கணத்திலும் மகள் கண்களில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் விழுவதைக் கூட எந்த அப்பாவாலும் தாங்கிக் கொள்ள முடியாது. அப்பாவிடம் உள்ள சின்னச் சின்ன குறைகளையும் தாண்டி பெண் குழந்தைகளுக்கு அப்பாக்களை அவ்வளவு பிடிக்கும். ஏன்?

❖ நட்பில் துவங்கி கணவன் வரை வந்து காணாமல் போய்விடும் ஆண்களுக்கு மத்தியில், தந்தை மட்டும் எந்தவித மாற்றமும் இன்றி கடைசி வரை உடனிருக்கிறார். பெண் குழந்தைகளின் நம்பத்தகுந்த உறவும் அவரே!

* * *

❖ பெண் குழந்தைகளை வளர்க்கும் அப்பாக்களுக்கு விரைவில் பொறுப்பும் வந்து விடுகிறது. பெண் குழந்தையின் காது குத்துதல் துவங்கி, தன் மகளின் மகளுக்கு காது குத்து நடத்துவது வரை வரிந்து கட்டிக் கொண்டு களம் இறங்குவதில் அப்பாக்களுக்கே கூடுதல் பொறுப்பு.

* * *

❖ பெண் குழந்தைகள் சொல்லும் பொய்கள் அப்பாக்களுக்கு கவிதை. அடங்காமல் செய்யும் குறும்புகள் அத்தனையும் ஆசை ஆசையாய் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய வானவில்கள்.

* * *

❖ பெண் குழந்தைகள் சற்றே வயதானவுடன் அப்பா – மகளை தொட்டுப் பேசுவதும் முத்தமிடுவதும் குறைந்தாலும் இவர் என் அப்பா என்ற எண்ணம் பெண் குழந்தைகள் மனதில் வலிமை அடைகிறது.

* * *

❖ பெண் குழந்தைகள் எப்போதும் அப்பா செல்லங்கள். உளவியல் ரீதியாக அது 'எடிபஸ்' தியரியின் இயல்பும் கூட. ஆசையோடு பெண் குழந்தைகள் கெஞ்சிக் கேட்பதை அப்பாக்களால் மறுக்க முடிவதில்லை. பாக்கெட்டில் பைசா இல்லாவிட்டாலும்.

* * *

❖ ஆண்கள் தனது மனைவியின் மீது காட்டும் அன்பை விட மகளின் மீது பொழியும் அன்புக்கு அளவில்லை. தன் காதலின் உயிர் வடிவமாய் மகளை உணர்வதுதான் மேஜிக்கின் பின்னால் ஒளிந்திருக்கும் உண்மை!

* * *

❖ பெண் குழந்தைகளுக்கு முதலில் அறிமுகமாகும் நேர்மையான நண்பன் தந்தை. அப்பாவோடு எதையும் பேசலாம், எதுவும் கேட்கலாம் என்ற கட்டுப்பாடற்ற நட்பும், பாதுகாப்பும் ஆணைப்பற்றிய நம்பிக்கையை ஆழமாக விதைக்கிறது.

* * *

❖ தன் குழந்தை நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று அம்மாக்களுக்கு கண்டிப்பின் வழியாகத்தான் எதையும் சொல்லத் தெரியும். தன் மகளின் மீது அப்பாக்கள் வைக்கும் அதீத நம்பிக்கையே அவளது தவறுகளையும் ரசிக்க வாய்ப்பளிக்கிறது. என் மகள் எதையும் ஜெயிப்பாள் என்ற நம்பிக்கை அத்தனை அப்பாக்களின் உள்ளங் கைகளிலும் ஒளிந்துள்ளது.

* * *

❖ எப்போதும் எதிர்காலத்தைப் பார்த்தே பயப்படும் அம்மாக்களுக்கு மத்தியில் நிகழ்காலத்தில் வாழ சொல்லித் தருவது அப்பாக்களின் இயல்பு. எந்தப் பிரச்னைகளும் பிராக்டிகலாக தீர்வு காணும் அப்பாக்களே பெண் குழந்தைகளின் சிறந்த ரோல் மாடல்களாக மாறிவிடுகின்றனர்.

* * *

❖ திருமணத்துக்கு பின்னரும் மகள் மீது தன் மருமகன் சுமத்தும் எந்தக் குற்றச் சாட்டையும் அப்பாக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. தன் மகள் எதைச் செய்தாலும் சரியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையில் நம் அப்பாக்களை எந்தக் காலத்திலும் அசைக்க முடியாது.

* * *

❖ பெண் குழந்தைகள் தன் வாழ்வில் சந்திக்கும் முதல் ஆண் அப்பாதான். ஒரு ஆண் எப்படி இருப்பான் என்பதையே பெண் குழந்தைகள் அப்பாவின் குணங்களின் வழியாக கற்றுக் கொள்கின்றனர். பெரும்பாலான பெண் குழந்தைகள் அப்பாக்களை அப்படியே பிரதிபலிக்கும் ஜெராக்ஸ் காப்பிகளாக மாறிவிடுவதும் இப்படித்தான்.

* * *

❖ நடை, உடை, பேச்சு, விருப்பம் என அப்பாவின் பழக்கங்கள் சில பெண் குழந்தைகளுக்கும் ஒட்டிக் கொள்ளும். என் பொண்ணு அவ அப்பா மாதிரி என்று சொல்லிக் கொள்வதில் அத்தனை அம்மாக்களுக்கும் பெருமை.

* * *

## அப்பா

அப்பாவின் தோள் மீது ஏறி
சுவாமி பார்க்கும் பால்யத்தில்
தெரிந்ததே இல்லை...
சுவாமியின் தோள் மேல்தான்
இருக்கிறேன் என்று !

* * *

அப்பாகிட்டே காசு இல்லம்மா
எனும் சொல் கேட்டு
அழகாகத் தலையாட்டும் மகளின்
புரிதல் தந்தைக்கு சோகமயமானது.

* * *

குழந்தையை பத்து மாதங்கள்
கருவறையில் சுமந்தவள் தாய் என்றால்...
தாயையும் சேர்த்து குழந்தையை
தன் நெஞ்சிலே சுமந்தவர் **"அப்பா"**

* * *

# 18. இது அப்பாவை நேசிப்பவர்களுக்கானது!

அப்பாவிற்கு அழத்தெரியாது !

குடும்பத்திற்காக மாடாய் உழைத்த போதும், பிள்ளைகளின் பசியாற்ற ஓடாய் தேய்ந்த போதும், என்னடா வாழ்க்கை இது என ஒரு நாளும் அழுதிருக்க மாட்டார் !

மனைவியை நெஞ்சில் சுமந்து, பிள்ளைகளை தோளில் சுமந்து குடும்பப் பொறுப்புகளை தலையில் சுமந்து, போகும் வழி தெரியாமல் விழிபிதுங்கி நின்ற போதும் ! தான் கலங்கினால் குடும்பம் உடைந்து விடும் என கல்லாய் நின்றவர் !

அம்மாவிடம் ஒட்டிக்கொள்வோம் ! அப்பாவிடம் எட்டி நிற்போம் ! முகம் கொடுத்து பேசிய வார்த்தைகள் சொற்பம் என்போம் ! ஆனால், தோல்வியில் துவளும்போது பிடித்துக்கொள்ள அப்பாவின் கைகளைத் தான் முதலில் தேடுவோம் !

நாம் திண்ணும் சோறும், உடுத்தும் உடையும், படித்த படிப்பும், அப்பாவின் வேர்வையில் தான் என ஒரு நாளும் அவர் சொல்லிக் காட்டியதில்லை, நேரில் நம்மிடம் நாலு வார்த்தை கூட பேசாதவர், ஊர் முழுக்க நம்மை பற்றிதான் பெருமையாக பேசி திரிவார். அம்மாவின் பாசத்தை அங்கலாய்க்கும் நாம், அப்பாவின் பாசத்தை உணரக்கூட இல்லையோ.

நமக்கு மீசை முளைத்தால் அவர் குதூகலிப்பார்!

தோளுக்கு மேல் வளர்ந்துவிட்டால் அவரே உயரமானதாக உணர்வார்! வாழ்க்கையில் நம்மை முன்னே நடக்க விட்டு பின்னே நின்று பெருமிதத்துடன் ரசிப்பார் !

நம் வாழ்க்கையின் பின்னால், அப்பா எப்போதுமே இருப்பார் !

அப்பாவிற்கு பாசத்தை வெளிப்படுத்த தெரியது !

அப்பாவிற்கு கொஞ்ச தெரியாது. அப்பாவிற்கு போலியாய் இருக்க தெரியாது ! அப்பாவிற்கு தன் கஷ்டத்தை வெளிக்காட்ட தெரியாது! அப்பாவிற்கு தனக்காக எதையும் சேர்த்து வைத்துக் கொள்ள தெரியாது !

வளர்த்த கடா மார்பில் பாய்ந்த போதும், ஒரு வேளை சோற்றுக்காக மருமகளுக்கு வேலைக்காரனாய் மாறிப்போன போதும், முதியோர் இல்லத்திற்கு தூக்கி வீசப்பட்ட போதும், அவர் அழுதவரில்லை! நம் சந்தோஷத்திற்காகவே எதையும் தாங்கும் ஆன்மா அவர்!

பாசமோ! மன்னிப்போ! அழுகையோ! உணர்வுகளை அவரிடம் உடனே வெளிப்படுத்தி விடுங்கள்! ஒரு வேளை உங்கள் நண்பனின் அப்பா மரணமோ! உங்கள் அப்பா வயதுடைய யாரோ ஒருவரின் மரணமோ ! உங்களை புரட்டி போட்டு அவர் பாசம் புரிந்து அப்பாவை தேடி ஓடி வரும் போது வீட்டில் அப்பா சிரித்துக் கொண்டிருக்கலாம் புகைப்படத்தில்!

**பாவம் அவருக்குத்தான் அழத்தெரியாதே!**

* * *

# 19. அழுக்கு வேட்டியும்...அப்பாவும் !

*தகப்பனை நேசிக்கும் ஒவ்வொரு மகனும் படிக்க வேண்டிய கதை !*

அப்பா நன்றாக குடித்திருந்தார். வரும்போதே குடித்து விட்டு வரும் அப்பாவை என்ன சொல்லித் திட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை. அப்பா குடிப்பது வழக்கமான ஒன்றுதான். அவர் எவ்வளவு குடித்தாலும் தன்னிலை மறந்து கீழே விழுந்து கிடந்தாகவோ, யாரையும் தகாத சொற்களால் திட்டியதாகவோ எனக்கு நினைவில் இல்லை.

ஆனாலும், குடித்து விட்டு வீட்டுக்குள் வருபவர்களை எனக்கு பிடிப்பதில்லை. அது அப்பாவாக இருந்தாலும் சரி !

காலையிலேயே தண்ணி அடிக்கணுமா? தண்ணி அடிக்கறதா இருந்தா வீட்டுப்பக்கம் வராதீங்க என்று சொல்ல நினைத்தேன். பிறகு அந்த சொற்கள் அவரது மனதை அதிகம் பாதிக்கலாம் என்று யோசித்து விட்டு அப்படியே விட்டு விட்டேன்.

அம்மாவோடு எத்தனை சண்டை போட்டாலும், அப்பாவை மரியாதைக் குறைவாகவோ, கடுமையாகவோ என் மனைவி ஒருபோதம் பேசி இருக்கவில்லை. அது எனக்கு எப்போதும் ஒரு வியப்பான ரகசியமாகவே இருந்தது!

நான் அவரை கடும் சொற்களால் ஏதேனும் பேசினால் கூட உடனடியாக ஒரு கோப்பைத் தேநீரை அவருக்குக் கொடுத்து, ‘நான் இருக்கிறேன்’ என்று ஆதரவுக்கொடி பிடிப்பாள். “எப்படி இருக்கீங்க.. அதிகமா குடிக்காதீங்க மாமா. இன்னும் ரொம்ப நாள் பேரப்புள்ளங்களோட நீங்க நல்லா இருக்கணும்தான் நெனக்கிறோம்” என்றபடி அப்பாவோடு தனது உரையாடலை துவங்கி சமாதானப்படுத்துவாள் என் மனைவி தாமரை.

சின்ன வயதில் இருந்தே அப்பாவைக் கண்டால் எனக்குப் பிடிப்பதில்லை. அதற்கு நிறையக் காரணங்கள் என்னிடத்தில் இருந்தன. ஒன்று அவர் ஒரு ஏழையாய் இருந்தது. இன்னொன்று அவர் காய்கறிக் கடை வைத்திருந்தது.

ஒரு காய்கறிக்கடைக்காரரின் மகன் என்று பள்ளி, கல்லூரியில் நண்பர்களிடத்தில் சொல்லிக் கொள்வதற்கும் எனக்கு இருந்த வெட்கமும் தாழ்வுணர்வுமே அவரை எனக்குப் பிடிக்காமல் போனதற்குக் காரணம் என்று நினைக்கிறேன். அவருடைய முகத்தையும், அவருடைய நடவடிக்கைகளையும் என்னையும் அறியாமல் நான் வெறுப்பது எங்கிருந்து தொடங்கியது என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கல்லூரி காலத்தில் ஒரு முறை அவரோடு நடந்து சென்று கொண்டிருந்தபோது கூடப்படிக்கும் பெண் தோழிகள் சிலர் கூட்டமாக எதிர்ப்பட்டார்கள். அவர்களின் கண்களில் படாமல் ஒளிந்து நடந்து செல்ல வேண்டியிருந்தது. இருப்பினும் அவர்களில் ஒருத்தி என்னைக் கவனித்து விட்டு “என்ன கதிரவா? அப்பாவோட வாக்கிங்கா?” என்று நக்கலடித்தாள். அவமானமாக இருந்தது.

அம்மாவிடம் வந்து "ஏம்மா... அப்பா யாரையும் புரிஞ்சுக்கவே மாட்டேன்கிறாறு? ஏண்டா இப்படி ஒரு ஆளுக்கு மகனாப் பொறந்தோம்னு இருக்கும்மா" என்றதும், அம்மா ஒன்றும் சொல்லவில்லை. அப்பாவை யாரும் குறை சொல்வது அம்மாவுக்குப் பிடிக்காது. அது மகனாக இருந்தாலும். அம்மா அப்பாவைப் பற்றி எந்த குறையும் எப்போதும் சொன்னதில்லல. அவர் குடிப்பதைப் பற்றி மட்டும அவர் வருத்தப் படுவாரே தவிர, அவரைப் பற்றிய எந்த ஒரு வெறுப்பான மனநிலையையும் வெளிப் படுத்தியதாக எனக்கு நினைவில்லை.

மாலையில் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பியபோது அப்பா அறைக்குள் படுத்திருந்தார். என் மகள் குழலி அப்பாவுக்கு அருகில் அமர்ந்து ஏதோ கதை கேட்டுக் கொண்டிருந்தாள். என் மகன் முருகனைத் தேட ஆரம்பித்தேன். "தாமரை அவன் எங்கே காணோம்? சாய்ங்கால நேரத்துல அவன வெளில விடாதன்னு சொல்லி இருக்கேன்ல" என்று அப்பாவின் மீதுள்ள எரிச்சலை மனைவியிடம் காட்டினேன். "அவன் மெடிக்கலுக்குப் போயிருக்காங்க, மாமாவுக்கு வயித்து வலின்னு நான்தான் மாத்திரை வாங்க அனுப்பி இருக்கேன்" என்றாள் தாமரை.

"ஆமா, காலையிலையே குடிக்கச் சொல்லு.. வயித்து வலி வராது. நம்மள வேற எதுக்கு தொந்தரவு பண்றாருன்னு தெரியல" என்று நான் முனகியது அனேகமாக தாமரையின் காதில் விழுந்திருக்கும் என்பது அவள் கையில் இருந்த பாத்திரத்தை அழுத்தமாகக் கீழே வைத்த விதத்தில் இருந்து தெரிந்தது.

அறைக்குள் பார்த்தபோது அப்பா, வலியால் அவதிப்படுவது மாதிரித் தெரிந்தது எனக்கு. உள்ளே சென்று "ரொம்ப வலியா இருந்தா ஆஸ்பிட்டலுக்கு போயிட்டு வரலாம் வாங்கப்பா" என்றேன்.

அவரும் எழுந்து சட்டையை மாட்டிக் கொள்ளத் துவங்கினார். வேறெதுவும் சொல்லாமல் அவர் அப்படிக் கிளம்பியது அவருக்கு வலி மிகுதியாக இருக்கிறது என்பதை எனக்கு உணர்த்தியது.

வண்டியைக் கிளப்பினேன். அருகில் இருக்கும் மருத்துவமனைக்குச் சென்று காத்திருந்து மருத்துவரைச் சந்தித்தபோது இரவு ஒன்பதுக்கும் மேலாகி விட்டிருந்தது. சில சோதனைகளை செய்துவிட்டு என்னை மீண்டும் உள்ளே அழைத்தார் மருத்துவர். "ஏதோ யூரினல் அலர்ஜி மாதிரித்தான் சார் தெரியுது. ஒரு கிட்னிதானே.. இது மாதிரிப் பிரச்சனைகள் அடிக்கடி வரும். எதுக்கும் இன்னைக்கு இரவு இங்கேயே இருந்து பாத்துக் கொண்டால் நல்லது" என்றார் மருத்துவர்.

"சரி சார், அப்படியே செய்யலாம்" என்று சொல்லிவிட்டு அப்பாவை நர்ஸ் காட்டிய அறையில் படுக்க வைத்து விட்டு, தாமரையை அழைத்தேன். மருத்துவர் ஒரு கிட்னி என்று சொன்னது கொஞ்சம் குழப்பமாக இருந்தது எனக்கு. அடுத்த பத்து நிமிடத்தில் தாமரை வந்தாள். பொதுவாகவே மருத்துவமனை செல்வது தாமரைக்கு பிடிக்காது. அதிலும் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மருத்துவ மனையில் இருந்தால் அவள் வருவதே இல்லை. ஆனால், அப்பாவுக்கு உடல்நலம்

சரியில்லை என்றவுடன் அவள் ஓடி வந்தது போலிருந்தது எனக்கு. இந்த குடிகார மனுஷன் மேலே மட்டும் அப்படி என்ன கரிசனமோ என்று மனதுக்குள் திட்டியபடி தான் அவளை உள்ளே அழைத்துச்செல்ல, அப்பா இப்போது படுக்கையில் அமர்ந்து இருந்தார்.

“மாமா, டாக்டர் என்ன சொன்னாரு?” என்று அப்பாவின் அருகில் சென்று அமர்ந்து கொண்டு வீட்டில் நிறுத்திய உரையாடலை இருவரும் துவங்கினர்.

பத்து மணிக்கு தம்பி, அம்மாவைக் கூட்டிக் கொண்டு மருத்துவமனை வந்து விட்டான். அம்மா நேராக அப்பாவிடம் சென்று அவரது படுக்கையில் அமர்ந்து கொண்டாள். “ஏங்க, காலைல ரொம்பக் குடிச்சீங்களா?”

“ஏன் வயித்த வலிக்குது? மத்தியானம் என்னம்மா சாப்டாரு? ஏண்டா டாக்டர் என்ன சொன்னார்? ஊசி போட்டாங்களா? மாத்திரை தந்தாங்களா?” என்று ஒரு சி.பி.ஐ. அதிகாரி அளவுக்குக் கேள்வி கேட்ட அம்மாவை முறைத்தேன் நான்.

“போடா, தாமரையையும கூட்டிட்டுப் போய் படுங்க, காலைல வரலாம்” என்று அம்மா சொல்லத் துவங்கியதும், அதற்காகவே காத்திருந்தவன் போல தாமரையைப் பார்த்தேன். அவளும் கிளம்புவதற்குத் தயாரானாள்.

நள்ளிரவில் ஒரு முறை அலைபேசியில் அம்மாவோடு உரையாடிக் கொண்டிருந்தாள். காலையில் கொஞ்சம் விரைவாகவே எழுந்து மருத்துவமனைக்குச் சென்றேன் நான். மருத்துவமனைக்குள் நுழைந்து அப்பா அனுமதிக்கப் பட்டிருந்த அறைக்கு முன்னால் சென்றபோது, அப்பாவில் குரல் காதில் விழுந்தது.

“இல்ல மாரி, அவன்கிட்ட கடைசி வரைக்கும் அதச் சொல்லவே கூடாது. ஏன்னா, அது ஒரு பெரிய கொறையாகவே போயிரும். தேவை இல்லாம அவனுக்கு பயம் வரும். இது வரைக்கும் அவனுக்கு கிட்னி பிரச்சனை எதுவும் வரவே இல்லை. ஒருவேளை அவனுக்கு இந்த ஆபரேஷன் பண்ணின விஷயம் இப்போத் தெரிஞ்சாக் கூட மனசளவுல எம்புள்ள உடைஞ்சு போயிருவான். நமக்கு ஏதோ குறை இருக்குன்னு அவனுக்கு மனசுல படக்கூடாது என்றுதானே இந்த விஷயத்த நாம இவ்வளவு காலமா மறச்சோம். இப்போ திடுதிப்புன்னு அவன்கிட்டச் சொல்லப்போறேன்னு சொல்றியே?”

“இல்லங்க, உங்க மேல அவனுக்கு வர வரப் பாசமே இல்லாமப் போகுது. நீங்க அந்தப் பய மேல எம்புட்டுப் பாசம் வச்சிருக்கீங்கன்னு இப்பவாவது அந்தப் பயலுக்குத் தெரியட்டும். ஒத்த கிட்னியை அந்தப் பயலுக்குக் குடுத்துட்டு நீங்க படுற பாடு எனக்குத்தாங்க தெரியும். அந்த வலி வேதனைலேயும், நகந்து நகந்து போய டாக்டர்கிட்ட நின்னு “எம்புள்ளைக்கு ஒன்னும் ஆகாதுல்ல சார்னு நீங்க அழுத கண்ணீர் இந்தப் பயலுக்கு என்னங்க தெரியும். நீங்க சொல்லக்கூடாதுன்னு சொன்ன சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு இவ்வளவு காலம் நான் பொறுமையா இருந்தது போதும்” என்று அம்மா விசும்பத் துவங்கி இருந்தாள்.

இந்த உரையாடலின் மையப்புள்ளியை நான் உணர்ந்து கொண்ட போது மருத்துவர் சொன்ன ஒற்றைக் கிட்னி குழப்பம் என்னிடம் இல்லை. எனக்குள் அப்பாவைக் குறித்த இனம் புரியாத உணர்வுகள் சுற்றி அலையத் துவங்கி இருந்தன.

எனக்கு பள்ளிக் காலம் வரையில் நடந்த தொடர் சோதனைகளும், மருந்து மாத்திரைகளும் நினைவுக்கு வந்து போயின. என்னைச் சுற்றி அந்த அதிகாலையில் இருள் சூழத் தொடங்கி இருந்தது. கட்டிடமே இடிந்து விழும் போலிருந்தது. எனக்கு அழ வேண்டும் போலிருந்தது. சத்தம் போட்டு அழுது விடுவேனோ என்று நான் அஞ்சினேன். மெல்ல அங்கிருந்து நகர்ந்து வெளியில் வந்தேன். விரைவாக வண்டியை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனபோது தாமரை பிள்ளைகளை பள்ளிக்குத் தயார் செய்து கொண்டிருந்தாள்.

தாமரை என் முகத்தைப் பார்த்தாள். "என்னங்க, மாமா எப்படி இருக்காங்க? டாக்டர் எதுவும் பயப்படுற மாதிரி இல்லைன்னு சொன்னாராம். இன்னைக்கு மத்தியானம் வீட்டுக்குக் கூட்டிட்டு போகலாம்னு அத்தை சொன்னாங்க" என்றாள்.

நான் அமைதியாகவே இருந்தேன். பிறகு முருகனைப் பார்த்து "முருகா, இன்னைக்கு லீவு போட்ரலாம். தாத்தா கூட ஆஸ்பத்திரில இருந்துட்டு அப்புறமா நீ போய் ஐஸ்கிரீம் வாங்கிட்டு வா " என்றதும் என்னை முருகன் விநோதமாகப் பார்த்தான். நாங்கள் மீண்டும் மருத்துவமனைக்குள் நுழைந்து அப்பாவிடம் சென்ற போது, "குடிக்கிறத விட்டிருங்க பெரியவரே" என்று அந்த இளம் மருத்துவர் அப்பாவுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். அப்பா, படுக்கையில் இருந்து எழுந்து நின்றார். கீழே வைக்கப் பட்டிருந்த மருந்துக் குப்பி ஒன்று அவர் காலில் தட்டவும் கொஞ்சம் தடுமாறினார். எனது கைகளால் அப்பாவை அணைத்துப் பிடித்துக்கொண்டேன் நான்.

"மெதுவாப்பா" என்று சொல்லி விட்டுக் கீழே குனிந்தேன். அப்பா எனது கண்களில் இருந்து வழிந்து கொண்டிருந்த கண்ணீரைப் பார்த்து விட்டார்.

"ஏண்டா ஐயா... அதான் ஒன்னும் இல்லைன்னு டாக்டர் சொன்னாரே" என்று சொல்லிவிட்டு "இவன் என்ன சின்ன புள்ள மாதிரி அழுதுகிட்டு... சொல்லு மாரி" என்றார். எதற்காகவோ அப்பா என்று கத்தினான் முருகன். அந்தச் சொல் உலகில் உச்சரிக்கப்படும் மிக உன்னதமான சொற்களைப் போல என் காதுகளில் ஒலிக்கத் துவங்கியது.

அழுக்கு வேட்டியாலும், காய்கறிக் கூடைகளாலும் இத்தனை காலம் மறைக்கப் பட்டிருந்த எனக்கே எனக்கான அப்பாவை நான் கண்டு பிடித்துக்கொண்டேன்! அவரது காய்த்துப் போயிருந்த கைகளை நான் கொஞ்சம் இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருந்தேன். அப்பாவின் உடலில் மிக இன்றியமையாத பணியாற்றும் ஒரு பகுதி எனக்கு பொருத்தப்பட்டிருப்பதை என் வாழ்க்கையின் மிகப்பெரிய வரமாக அந்தக் கணங்களில் நான் நம்பத் துவங்கினேன்.

* * *

# 20. வயதுக்கு வந்த மகளை வளர்க்க வேண்டியது அம்மாவா? அப்பாவா?

உண்மையில் உங்கள் டீன் ஏஜ் மகளுக்கு அம்மாவை விட அதிகம் தேவை அப்பாதான்.

உறவு முறைகளிலேயே மிகவும் அழுத்த மானது தந்தைக்கும் மகளுக்குமுள்ள உறவுதான் என்கிறார்கள் பல அறிஞர்கள்.

தந்தையின் சரியான வழிகாட்டுதல், அன்பு, அரவணைப்பு இல்லாததுதான் எல்லாவித பிரச்சினைக்கும் மூல காரணம்.

ஒரு டீன் ஏஜ் மகளுக்கு அப்பா என்பவர் வெறும் ஒரு நபரல்ல. ஒரு நண்பன்! பாதுகாவலன்!, ஊக்கமூட்டுபவர்!, உற்சாகப் படுத்துபவர்!, தன்னம்பிக்கை வளர்ப்பவர் !.

நம்பிக்கை ஊட்டுபவர், பண்புகளை ஊட்டுபவர், வழிகாட்டி

என எக்கச்சக்க முகங்கள் அவருக்கு இருக்க வேண்டும்.

ஒரு பெண் முதலில் சந்திக்கும் ஆண் அவளுடைய அப்பாதானே!

அப்பாவிடமிருந்து தான் அவள் ஒரு ஆணுக்குரிய இலக்கணங்களைக் கற்றுக் கொள்கிறாள்.

ஆண் என்பவனின் குணாதிசயங்களைக் கற்றுக் கொள்கிறாள்.

ஆண் என்பவரின் தேவையைக் கண்டு கொள்கிறாள்

எனவே மகள் மழலையாய் இருக்கும் போதே எல்லா வகையிலும் முன் மாதிரியான வாழ்க்கை வாழ வேண்டியது அப்பாவின் கடமையாகிறது.

சின்ன வயதில் மழலையாய் சிரித்துச் சிணுங்கையில் அழகழகாய் ஆடைகள் வாங்கிக் கொடுப்பதானாலும் சரி, பென்சில், இரப்பர், வாங்குவதானாலும் சரி ரொம்பவே ஈடுபாடு காட்டுவீர்கள். எல்லாவற்றையும் தேடித் தேடி வாங்குவீர்கள்.

மகளும் ரொம்பவே சமர்த்தாய் உங்கள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தம் தருவாள்.

திடீரென ஒரு நாள் பார்த்தால் சட்டென்று வளர்ந்து நிற்பாள். என் டாடி சூப்பர் என்று சொல்லிக் கொண்டிருந்தவள் டாடிக்கு ஒண்ணும் தெரியாது என்று பல்டி அடிப்பாள்.

எல்லாவற்றுக்கும் காரணம் அவளுடைய உடல் மன மாற்றங்கள் தான்.

“என் பெண்ணுக்கு என்னைக் கண்டாலே புடிக்கல. அவளுக்கு நான் இனிமே தேவையில்லை” என்றெல்லாம் புலம்பாதீர்கள்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் மகள் உங்கள் மகள்தான்.

உங்கள் மீதான பாசமும், அன்பும், கரிசனையும் எப்போதுமே அவளிடம் நிரம்பி இருக்கும்.

ஆனால் அவளுடைய வெளிப்படுத்தும் விதத்தில் தான் மாற்றங்கள்.

டாடி ப்ளீஸ்...டாடி.. வாங்கிக் கொடுங்க டாடி என்று சின்ன வயதில் கெஞ்சிய மகள் டாட்... எனக்கு இது வேணும் முடியுமா? முடியாதா? என பிடிவாதம் பிடிப்பாள்.

உடனே நீங்கள் பதட்டப்படுவீர்கள்

ஆனால் உண்மையில் அவள் உங்களுடைய அனுமதியை எதிர்பார்த்து நிற்கிறாள்.

அப்பாவின் அனுமதி இருந்தால்தான் அவளுக்கு அதில் ஒரு ஆத்ம திருப்தி

நீங்க பாட்டுக்கு எல்லாவற்றையும் சகட்டு மேனிக்கு நிராகரித்துத் தள்ளாதீர்கள்

நல்லதுன்னா அப்பா ஒத்துப்பார் என்னும் நிலைமைதான் இருக்க வேண்டுமே தவிர அவர்கிட்டே என்ன சொன்னாலும் வேலைக்காவாது என்ற நிலைக்கு நீங்கள் வந்துவிடவே கூடாது.

நீங்க பேசுவதை விட மிக மிக அதிகமாய் மகள் பேசுவதைக் கேட்க வேண்டும் அதுதான் முக்கியம்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், என் அப்பா டெக்னாலஜியில் என்னைப் போல ஹைடெக் என கருதுவதில் உங்கள் மகளுக்கு இருக்கும் மகிழ்ச்சி அலாதியானது.

நீங்கள் அந்த டெக்னாலஜி உலகுக்குள் நுழைந்தால் தான் அதிலுள்ள நன்மை தீமைகளை நாசூக்காக உங்கள் மகளுக்குச் சொல்லவும் முடியும்.

இன்னொரு விஷயம், உங்கள் மகள் பருவத்துக்குரிய வனப்புடன் வளர்கிறாள் என்றதும் தள்ளியே நிற்காதீர்கள்.

அது மன அளவில் உங்கள் டீன் ஏஜ் மகளைப் பாதிக்கும் என்கின்றனர் உளவியலாளர்கள்.

உங்கள் மகளின் தோளைத் தட்டிப் பாராட்டுவதோ, தலையைக் கோதிப் பாராட்டுவதோ, செல்லமாய் அரவணைத்துக் கொள்ளுதலோ அவளுக்கு ரொம்பவே தேவை.

அடிக்கடி வெளியே கூட்டிப் போங்கள். ஐஸ்கிரீம் பார்லர் போன்ற இடங்களுக்கு ஜாலியாகப் போய் வாருங்கள்.

மகளுடன் நிறைய நேரம் செலவிடுங்கள். நிறைய நேரத்தை நீங்கள் அவளுடன் செலவிடும்போது அவளுக்கு இயல்பான உரையாடல் சாத்தியப்படுகிறது.

நினைத்ததை எப்படியேனும் வெளிப்படுத்தி விடுவாள்.

அவள் பள்ளியிலோ, கல்லூரியிலோ ஏதேனும் விழா நடக்கிறது, அழைக்கிறாள் என்றால் தவற விடாதீர்கள்

வெறுமனே நீங்கள் அவளுடன் இருந்தால் போதும், அவள் உங்களை ரொம்பவே கொண்டாடுவாள்.

நீங்கள் அவளை அன்பு செய்கிறீர்கள், சரி

மதிக்கிறீர்கள்.

ஆனால், அதை அவளிடம் வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறீர்களா?

இல்லையேல் அதைச் சொல்லுங்கள் முதலில்.

டீன் ஏஜ் மனது எதிலும் வெளிப்படையாய் இருக்க விரும்பும் மனது.

சுற்றி வளைத்து எதையும் பேசாமல், உங்கள் மகளை நீங்கள் மதிக்கிறீர்கள், அன்பு செய்கிறீர்கள் என்பதைச் சொல்லி விடுங்கள்.

டீன் ஏஜ் மகளின் தினசரிகள் பல்வேறு அனுபவங்களால் நிரம்பி வழியும்.

ஆனந்தம், கவலை, எரிச்சல், சோகம் என எக்கச்சக்க உணர்வுகள் நிரம்பி வழியும்.

சக தோழிகளின் கிண்டல், படிப்பு, அழகு என கண்டதுக்கும் கவலைப்படும் வயது அது.

அதை முதலில் நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

“எதுவானாலும் கவலையில்லை...அப்பா இருக்கிறார்” என்னும் நம்பிக்கையை நீங்கள் உங்கள் மகளிடம் ஊட்ட முடிந்தால் அதை விடப் பெரிய விஷயம் ஏதும் இல்லை. அதற்கு மகளிடம் உண்மையாய் இருக்க வேண்டியது உலக மகா தேவை.

எந்தக் காரணம் கொண்டும் அவளைத் திட்டாதீர்கள்.

அவள் என்னதான் மிகப் பெரிய தவறு செய்திருந்தாலும் சரி, உணர்ச்சி வசப்படாதீர்கள். பிரச்சினைகள், விளைவுகள், தீர்வுகள் என சிந்தியுங்கள்.

நீங்கள் பதட்டப்பட்டு உங்கள் கோபத்தையும், ஆத்திரத்தையும் மகளிடம் காட்டிவிட்டால் போச்சு.

அது வீட்டைப் பூட்டி சாவியை தூர எறிவதற்குச் சமம்.

உங்கள் மகள் அதன்பின் உங்களிடம் எதையும் பேசுவாள் என்று சொல்வதற் கில்லை.

எப்போதும் அவளிடம் தோழமை உணர்வுடன் பழகுங்கள்.

அடிக்கடி உங்கள் மூடு மாறாமல் இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம்.

அப்பா எப்போ அமைதியா இருப்பாரு, எப்போ எரிஞ்சு விழுவாருன்னு தெரியாது என்னும் நிலைமை வந்தால் சிக்கல்தான்.

அவளுடைய படிப்பு, நட்பு எல்லாவற்றிலும் உங்கள் அளவான ஈடுபாடு இருக்கட்டும்

அவளுக்கு இதெல்லாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை என்று மட்டும் எப்போதும் நினைக்காதீர்கள்.

குறிப்பாக ஆண்களைப் பற்றியும் ஆண்களின் குணாதிசயங்கள், சிந்தனைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றைப் பற்றியும் அவளுக்குப் புரியும் வகையில் அவ்வப்போது சொல்வது அவசியம்.

வெளுத்ததெல்லாம் பாலல்ல என்பதை அவள் தெரிந்து கொள்ள வேண்டும்.

சமூகம் சார்ந்த பல அறிதல்களையும் அப்பாதான் அவளுக்குச் சொல்லித் தர வேண்டும்.

ஒரு ஆச்சரிய உண்மை என்னவென்றால் பதின் வயதுத் தொடக்கத்தில் இருக்கும் மனோபாவம் நாள் செல்லச் செல்லப் பக்குவப்படும்.

பெண்ணின் திருமண வயது வரும்போது அப்பாதான் உலகம் எனும் நிலைக்குப் பெண்கள் வந்து விடுவார்கள். அதுவரை சலிக்காத வழிகாட்டலும், பொறுமையான அணுகுமுறையும், நிபந்தனையற்ற அன்பும் நீங்கள் காட்ட வேண்டியது அவசியம்.

சின்ன வயதிலிருந்தே தந்தையின் வழிகாட்டுதலிலும், அன்பிலும் வளரும் குழந்தைகள் நல்ல மன வளர்ச்சி அடையும் என்கிறார் எழுத்தாளரும் மருத்துவருமான மெக் மீக்கர், ஸ்ட்ராங் ஃபாதர்ஸ், ஸ்ட்ராங் டாட்டர்ஸ் என்னும் நூலில் அப்பாவின் வழிகாட்டுதலே டீன் ஏஜ் பெண்களுக்கு மிக மிகத் தேவை என்கிறார்.

என் பொண்ணோட வாழ்க்கையில் மிக முக்கியமான நபர் நான் என்னும் எண்ணம் அப்பாக்களுக்கு வரவேண்டியது தான் முதல் தேவை என்கிறார் இவர்.

என் அப்பாவைப் போல நல்ல ஓர் ஆண் எனக்குக் கணவனாக வர வேண்டும் என உங்கள் மகள் நினைக்க வேண்டும்.

அப்படி நடந்தால் நீங்கள் ஒரு அப்பாவாக வெற்றி பெற்று விட்டீர்கள் என்று பொருள்.

இது மகளை பெற்ற அப்பாக்களுக்கு சமர்ப்பணம்.

* * *

தலைக்கு மேலே உட்கார வைத்து
அழகு பார்க்கும் அப்பாவை...
நான் ஒரு நாளும் தலை குனிய
வைத்து விடக்கூடாது.

* * *

தான் தடுமாறி விழுந்த இடங்களில்
தவறி கூட மகன்
விழுந்து விடக்கூடாது என்று
மனதார நினைப்பவர்
**'அப்பா'**

* * *

அப்பா என்றாலே பெண் பிள்ளைகள் உருகக் காரணம்..
இந்த உலகத்தில் தன்னை ஒருபோதும் ஏமாற்ற நினைக்காத ஒரே ஆண் அப்பா மட்டுமே.

* * *

சிறு வயதில் என் கைப்பிடித்து
நடை பயில
சொல்லிக்கொடுத்த அப்பா
என் கரம் பிடித்து நடந்தபோது
என்ன நினைத்திருப்பார் ?

* * *

கேட்ட உடனே கொடுப்பதற்கு
முடியாததால்தான்
அப்பாவை அனுப்பி
இருக்கிறாரோ கடவுள்?

* * *

# 21. ஒரு மழலையின் அன்பு!

ஒரு மனிதர் சாலை ஓரத்தில் ஓடிக் கொண்டிருந்தபோது தெரியாமல் இன்னொரு நபர் மீது இடித்துவிட்டார்

ஐயோ தெரியாமல் இடித்து விட்டேன். மன்னித்து விடுங்கள் என்று இவர் சொல்ல, பரவாயில்லை என்று அவர் சொல்ல இருவருமே கண்ணியத்துடனும், புன்னகையுடனும் விடைபெற்றார்கள். அவர்களிடையே மனஸ்தாபத்துக்கான காரணமில்லாமல் போயிற்று.

அன்று அவர் வீட்டுக்கு வந்தார்.

இரவு உணவு முடித்து திரும்புகையில் அவருடைய மகன் அவருக்குப் பின்னால் நின்றிருந்தான். கைகளைப் பின்னால் கட்டியபடி தந்தை திரும்புகையில் அவனைத் தெரியாமல் இடித்து விட்டார்.

வழியில் நிற்காதே, ஓரமாய்ப் போ.

அவருடைய வார்த்தையில் அனலடித்தது.

சிறுவன் முகம் வாடிப்போய் விலகினான். அவனுடைய கண்களில் சோகத்தின் நதி முளைத்தது. அது இமை ஓரங்களை இடித்து தரையிறங்கத் துவங்கியது.

இரவு தூங்குகையில் அவர் மனதுக்குள் ஒரு சிந்தனை ஓடியது.

வழியில் யாரோ ஒருவரிடம் நாகரீகமாகவும், அன்பாகவும் நடந்து கொள்ளத் தெரிந்த எனக்கு சொந்த மகனிடம் அப்படி நடந்து கொள்ளத் தெரியவில்லையே என்று மனதுக்குள் எண்ணினார்.

நேராக எழுந்து மகனின் படுக்கையறைக்குச் சென்றார்.

உள்ளே மகன் தூங்காமல் விசும்பிக் கொண்டிருந்தான்.

அவனுடைய கண்கள் சிவந்திருந்தன. அவனருகில் மண்டியிட்ட தந்தை "என்னை மன்னித்துவிடு நான் உன்னிடம் அப்படிப் பேசியிருக்கக் கூடாது " என்றார்.

சிறுவன் திரும்பினான்.

சிறுவனின் கண்களிலிருந்த கவலை சட்டென்று மறைந்தது. எழுந்து உட்கார்ந்தான்.

வேகமாக கட்டிலிலிருந்து கீழே குதித்து கட்டிலினடியில் வைத்திருந்த பூங்கொத்தை தந்தையின் கையில் வைத்தான்.

இதென்ன? தந்தை வியந்தார்.

இன்றைக்கு வெளியே நடந்து கொண்டிருந்த போது இந்தப் பூக்களைப் பார்த்தேன்.

பல நிறங்களில் இருந்த பூக்களைப் பொறுக்கி உங்களுக்காக ஒரு மலர்க் கொத்து செய்தேன். அதிலும் குறிப்பாக உங்களுக்கு நீல நிறம் பிடிக்கும் என்பதற்காக அதை நிறைய சேகரித்தேன். அதை உங்களிடம் ரகசியமாகச் சொல்வதற்காகத் தான் உங்கள் பின்னால் வந்து நின்றேன்.

சிறுவன் சொல்ல தந்தை மனம் உடைந்தார்.

சிறுவனையும், மலர்களையும் ஒரு சேர அணைத்த அவருடைய கண்களில் கண்ணீர் வழிந்தது.

ஒரு மழலையின் அன்பைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில்தான் இருந்ததற்காக அவர் வருந்தினார்.

குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம்.

அதை சொர்க்கமாக்குவதும் நரகமாக்குவதும் நம்முடைய செயல்களில் தான் இருக்கிறது.

பணத்துக்கான ஓட்டங்களில் நாம் இழந்து கொண்டிருப்பது ஆனந்தத்தின் நிமிடங்களை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒருவேளை நாம் நாளை இறந்து போக நேரிட்டால் அலுவலகம் இன்னொரு திறமை சாலியை சில நாட்களில் கண்டுபிடிக்கும் குடும்பம் அப்படியல்ல அதில் ஏற்படும் இழப்பு ஆழமாய்த் தைத்த முள் போல நினைவுகளால் நிமிண்டும் போதெல்லாம் வலித்துக் கொண்டே இருக்கும்.

வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும் அன்பினால் நிரப்பப்படாவிட்டால் அது வெறுமையாகவே இருக்கும். பணமே மகிழ்ச்சியைத் தரும் என்பது தலைமுறைக்குத் தரப்பட்டிருக்கும் தவறான பாடம். மகிழ்ச்சியை சதுர அடிகளில் வாங்க முடியாது.

குடும்பங்களில் அதிக நேரம் செலவிடுங்கள்.

அன்பை அதிகமாய் சம்பாதியுங்கள்.

* * *

மழுங்கிப்போன அப்பாவின்
கண்ணாடியை அணிந்த போது
பூதாகரமாய் தெரிந்தது
எங்களுக்காக அவர் தொலைத்த
வாழ்க்கை !

* * *

மகளைப்பெற்ற அப்பாக்களுக்கு
மட்டுமே தெரியும்
தன்னைப் பெற்ற
அன்னையின் மறுபிறவிதான்
**மகள்** என்று...

* * *

கடைசிவரை புரிந்துகொள்ள
முடியாத... புரிந்து
கொள்ளும்போது படிக்கக்
கிடைக்காத புத்தகம்
**அப்பா...**

* * *

# 22. மை டியர் சின்

தஞ்சையில் இருந்து சென்னைக்கு பத்திரிக்கை பணிக்கு வந்தபோது நல்ல சம்பளம்தான். ஆனாலும், ஊதாரி, வீட்டுக்கு போன் போட்டு ஏதாவது பொய் சொல்லி 'ரெண்டாயிரம் மணியார்டரில் அனுப்புங்கப்பா...' என்பேன். (அப்போது நெட் பேங்கிங் கிடையாது)

அப்பாவும் உடனடியாக அனுப்பி விடுவார். (சம்பளத்தை விட அதிகமாக அப்பாவிடம் வாங்கியிருக்கிறேன்).

மணியார்டரில் பணம் அனுப்பும்போது, அந்த விண்ணப்பத்தில் சில வரிகள் ஆங்கிலத்தில் எழுதி அனுப்புவார் அப்பா. ( ஆங்கிலத்திலும் மிகப் புலமை பெற்றவர் ) அதைக் கையால் எழுதாமல், யாரிடமாவது தட்டச்சு செய்து அனுப்புவார். அது அவரது வழக்கம்.

ஒவ்வொரு முறையும், 'மை டியர் சன் (My dear son ) என்று ஆரம்பிக்கும் குறுங்கடிதம். ஒருமுறை மணியார்டர் வந்தபோது அதில் டைப் செய்திருந்த வார்த்தையைப் பார்த்து அதிர்ந்தேன்.

மை டியர் சன் ( My Dear Son) என்பதற்குப் பதிலாக (My Dear Sin) என்று தட்டச்சு செய்திருந்தது. ஆங்கிலத்தில் Sin என்றால் 'பாவம்' என்று பொருள். அப்பா வேண்டுமென்றே அப்படி டைப் செய்யச் சொல்லியிருக்க மாட்டார். ஆனாலும் 'சின்' என்ற வார்த்தை மனதை ஏதோ செய்தது.

அந்த மணியார்டர் பணத்தை வாங்காமல் திருப்பி அனுப்பி விட்டேன்.

அப்பாவுக்கு போய்ச் சேர்ந்தது பணம். அவருக்கு அதிர்ச்சி! உடனடியாக என் அலுவலகத்துக்கு போன் செய்தார்.

"ஏம்பா... பணம் திரும்பி வந்திருச்சி" என்று கேட்டார் பதட்டமாக.

அப்பாவிடம் எப்போதுமே வெளிப்படை யாகவே பேசுவேன். "மை டியர் சின் என்று இருந்துசிப்பா... அது சரிதானேன்னு தோணுச்சு... அதான்..." என்றேன். அப்பா சிரித்தார். நான் அவரை மிகவும் நன்றாக கவனித்திருக்கிறேன். பெருந்துன்ப நேரங்களில் அவர் சிரிக்கவே செய்திருக்கிறார். அப்படியானதொரு துயரத்தை வெளிப்படுத்திய அந்த சிரிப்பை இனம் கண்டு கொண்டேன்.

அப்படியே போனை வைத்துவிட்டார் அப்பா.

மறுநாள் காலை அலுவலகத்தில் எனக்கு செக்யூரிட்டியிடமிருந்து (இன்டர்காம்) அழைப்பு. என்னைப் பார்ப்பதற்கு அப்பா வந்திருப்பதாக தகவல் சொன்னார். இரண்டாவது மாடியிலிருந்து ஓடி வந்தேன். செக்யூரிட்டி அலுவலகத்தில் அப்பா அமர்ந்திருந்தார்.

உள்ளுக்குள் ஏதோ செய்தாலும், சாதாரணமாக முகத்தை வைத்தப்படி 'என்னப்பா திடீர்னு...' என்று கேட்டேன்.

அப்பா என் தலையை வருடி, ‘தம்பி... அப்பா உன்னை சின்... அதான் பாவம்னு நினைப்பேனா? உனக்கென்ன ராஜா...நீதான் என் சொத்து. அந்த டைப்பிஸ்ட் ஏதோ அவசரத்துல தப்பா டைப் அடிச்சுட்டார். இதுக்கெல்லாமா வருத்தப்படுறது? பணத்தை திருப்பி அனுப்பிட்டியே...சிரமப்படுவேல்ல... அதான் கொடுக்க வந்தேன்’ என்றார்.

முட்டிக்கொண்டு வந்த அழுகையை கட்டுப் படுத்திக்கொண்டு ஏதேதோ பேசினேன். அப்பாக்கள் வரம்.

தாயிடம் நிரூபியுங்கள் – ‘கடைசி வரை அன்பாக இருப்பேன்’ என்று.

தந்தையிடம் நிரூபியுங்கள் – ‘கடைசி வரை உங்கள் பெயரை காப்பாற்றுவேன்’என்று.

தோற்றுப் போனால்...வெற்றி கிடைக்குமா?

அம்மாவிடம் தோற்றுப் போ...அன்பு அதிகரிக்கும்.

அப்பாவிடம் தோற்றுப்போ...அறிவு மேம்படும்.

* * *

அன்பை உள்ளே
வைத்துக்கொண்டு
எதிரியைப் போல் தெரியும்
ஒரே உறவு....
**அப்பா**

* * *

MY FIRST HERO IS
ALWAYS
MY
**DAD**

* * *

வாழ்க்கையில் கடைசிவரை
தனக்குன்னு சமைக்காத ஜீவன்
**“அம்மா...”**
தனக்குன்னு சம்பாதிக்காத ஜீவன்
**“அப்பா...”**

* * *

வாழ்க்கையின் கஷ்டங்களை பிள்ளைகளுக்குத் தெரியாமல் பிள்ளைகளின் மகிழ்ச்சியில் தன் கஷ்டங்களை கரைப்பவர்தான் **அப்பா..**

* * *

# 23. அப்துல் கலாமின் இளமைக்கால வாழ்க்கை

நான் சிறுவனாக இருக்கும்போது ஒரு நாள் இரவு நேரம் வெகு நேர வேலைக்கு பின்னர் என் தாய் இரவு சிற்றுண்டி செய்யத் தொடங்கினார்.

என் தாயும் எங்கள் குடும்பத்தை சமாளிக்க வேலைக்கு செல்வது வழக்கம்.

சமைத்த பின் கருகிய ரொட்டி ஒன்றை என் கண் முன், என் தந்தைக்கு பரிமாறினார் என் தாய். ஆனால் என் தந்தையோ அதை சிறிதும் பொருட்படுத்தாமல் சாப்பிட்டார்.

“இன்றைய பொழுது பள்ளியில் எப்படிப் போனது” என்று என் தந்தை என்னிடம் கேட்டார். நான் அன்று என்ன பதில் சொன்னேன் என்று தெரியவில்லை.

என் தந்தையிடம் கருகிய ரொட்டியை பரிமாறியதற்கு வருத்தம் தெரிவித்தார் என் தாய். ஆனால் அதற்கு என் தந்தையோ, எனக்கு கருகிய ரொட்டிதான் ரொம்ப பிடிக்கும் என்று பதில் சொன்னதை என்னால் இன்னும் மறக்க முடியாது.

சாப்பிட்டு முடித்த சற்று நேரத்துப் பின், நான் மெல்ல என் தந்தை அருகில் சென்று இரவு வணக்கம் சொல்லிவிட்டு, அவரிடம் தயக்கத்துடன் கேட்டேன்.

“அப்பா, உங்களுக்கு உண்மையாகவே கருகிய ரொட்டி பிடிக்குமா?”

சற்று நேரம் அமைதியாக இருந்த என் தந்தை, என்னை இறுக்கமாக அணைத்துக் கொண்டு சொன்னார்.

மகனே, உங்க அம்மா தினமும் வேலைக்கும் சென்று கொண்டு, நமக்கும் பணிவிடை செய்கிறார், களைத்துப் போய் இருப்பார். ஒரு கருகிய ரொட்டி யாரையும் காயப் படுத்தப்போவதில்லை. ஆனால் கடும் வார்த்தைகள் கண்டிப்பாக காயப்படுத்தும்.

நான் ஒன்றும் சிறந்த மனிதன் அல்ல. ஆனால் அதற்கு முயற்சிக்கிறேன்.

இவ்வளவு வருடங்களில் நான் கற்றுக் கொண்டது, நடப்பது எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு சந்தோஷமான மனநிலைக்கு நாம் மாறுவதே.

அப்துல் கலாமின் இந்த அனுபவத்தைப் படித்தபோது அவரது அப்பா மீது அளவில்லாத மரியாதை எழுந்தது. அது இன்று முழுவதும் என்னைத் தொடர்ந்து வந்தது.

“ஒரு கருகிய ரொட்டி யாரையும் காயப் படுத்தப் போவதில்லை. ஆனால் கடும் வார்த்தைகள் கண்டிப்பாக காயப்படுத்தும்.”

இந்த தத்துவத்தை எண்ணியபடியே இன்று இரவு சாப்பிட அமர்ந்தபோது எனக்கு பரிமாறப்பட்ட உணவு கொஞ்சம் ஆறித்தான் போய் இருந்தது. ஆனால் என் உணர்வுகள் ரொம்பவே மாறிப் போய் இருந்தது.

மனைவியின் உணவை இனி ஒருபோதும் குறை சொல்லக்கூடாது என்ற திருந்திய மன உணர்வோடு இருந்ததை இனிதே உண்டு முடித்தேன்.

எதிர்காலத்தில் நம் குழந்தைகள் கலாமின் கொள்கைகளை கடைப்பிடிக்கட்டும். இப்போது நாம் கொஞ்சம் அவரது அப்பாவின் கொள்கைகளை கடைப்பிடிக்கலாமே.

* * *

**ஒரு நாடு ஊழலற்றதாகவும்,**
**நல்ல சிந்தனையாளர்களைக் கொண்டதாகவும்**
**இருக்க வேண்டுமானால்...**
**அத்தகைய சாதனையை**
**மூன்று பேர்களால் மட்டுமே உருவாக்க முடியும்.**

**அம்மா ! அப்பா ! ஆசிரியர் !**

அன்னையர் தினம் : மே மாதத்தில் வரும் 2-ஆம் ஞாயிறு

தந்தையர் தினம் : ஜுன் மாதத்தில் வரும் 3-ஆம் ஞாயிறு